Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-10

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | மாசி -11 | 23-02-2004 | திங்கட்கிழமை | ஓசை-005




# பௌத்த சங்கம் தேர்தலில் குதித்தமை

# ஜே.வி.பி-சு.க.கூட்டணிக்கு நெருக்கடி

## தேசப் பற்றாளரின் வாக்குகள் கிடைக்காது என அச்சம்

(கொழும்பு)

**எதிர்வரும் ஏப்பிரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடுவது என பௌத்த மகாசங்கம் எடுத்துள்ள தீர்மானம் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணிக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளதாக தகவல்கள் கூறுகின்றன. இதன் மூலம் தேசப்பற்றாளர் முன்னணியின் ஆதரவு வாக்குகள் தமக்கு கிடைக்காது போய் விடலாம் என ஐ.ம.சு. முன்னணி அச்சமடைந்துள்ளது.**

ஜாதிக ஹெல உறுமய என்னும் அமைப்பின் சார்பில் பௌத்த மகா சங்கம் எதிர்வரும் தேர்தலில் போட்டியிட முன்வந்திருப்பது குறித்து புதிதாக அமைக்கப்பட்ட ஜே.வி.பி. - சு.க. கூட்டமைப்பு பெரும் விசனமடைந்துள்ளது. கடந்த காலத்தில் இவ் இரு கட்சிகளையும் சேர்ந்தோர், தேசப்பற்றாளர் முன்னணி என்னும் பெயரிலான அமைப்பில் சமாதானத்திற்கு எதிரான பல ஊர்வலங்கள்,போராட்டங்களில் ஈடுபட்டு வந்தமை தெரிந்ததே. இதன் மூலம் தேசப்பற்றாளர் முன்னணி தமக்கு தேர்தலில் ஆதரவு வழங்கும் என எதிர்பார்த்திருந்த வேளையில் பௌத்த மகாசங்கம் தேர்தலில் குதித்திருப்பது பெரும் சங்கடத்தையும், அச்சத்தையும் தோற்றுவித்துள்ளது.இதனையடுத்து ஜாதிகஹெல உறுமயவிற்கு எதிராக தீவிர பிரச்சாரத்தில் இறங்க இவ் இரு கட்சிகளும் தீர்மானித்துள்ளன.

எவ்வாறான நிலையில் தமது கட்சியின்கொள்கைகள் மார்ச்2ஆம் திகதி வெளியிடப்படும் எனஜாதிக ஹெல உறுமய அறிவித்துள்ளதுடன் தேர்தல்நியமனப் பத்திரங்களையும் தாக்கல் செய்துவருகிறது.

## ஐ.தே.க.வில் இணைவு

முன்னாள் அமைச்சர் ரோனி டிமெல் ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்துள்ளார்.2001 ஆம் ஆண்டு இவர் பொதுசன ஐக்கிய முன்னணி தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார்.இவருடன் இவரது மனைவியும் மாத்தறை மாவட்ட முன்னாள் பொ.ஐ.மு. பாராளுமன்ற உறுப்பினருமானமல்லிகா டி மெல்லும் ஐ.தே.க.வில் இணைந்துள்ளார்.

## தமிழ்க் கூட்டமைப்பினர் இன்று வேட்பு மனுத் தாக்கல்

### வேட்பாளர் பட்டியலும் வெளியீடு

எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ். மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் பட்டியல் நேற்றிரவு வெளியானது. யாழ். நகரின் மாட்டின் வீதியிலுள்ள தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் வேட்பாளர் பட்டியல் பூர்த்தியாக்கும் பணிகள் இடம்பெற்றிருந்தன. இன்றையதினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் மாவை.சேனாதிராசா தலைமையில் வேட்பாளர் பட்டியல் தாக்கல் செய்யப்படவுள்ளது.

வேட்பாளர்கள் விபரம், மாவை. சேனாதிராசா (த.வி.கூ.), ந. ரவிராஜ் (த.வி.கூ.), எஸ். சிவமகாராஜா (த.வி.கூ.), பொ. கஜேந்திரகுமார் (அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ்), சி.வி. கே. சிவஞானம் (த.கா), கே.வி. சிவாஜிலிங்கம் (ரெலோ), என். ஸ்ரீகாந்தா (ரெலோ), சொலமன் சூ. சிறில் (யாழ். மாவட்ட வெகுசன அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர்), கி. சிவநேசன் (பனை, தென்னை வள கூட்டுறவுச் சங்க பிரமுகர்), திருமதி பத்மினி

(10ஆம் பக்கம் பார்க்க)

## கண்டி, நுவரெலியாவில் இ.தொ.கா. ஐ.தே. கட்சியுடன் இணைந்து போட்டி

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கண்டி, நுவரெலியா மாவட்டங்களில் ஐ.தே.கட்சியுடன் இணைந்து போட்டியிடத் தீர்மானித்துள்ளது.

கண்டிக்கான வேட்பாளரின் நியமனம் தொடர்பான கட்சிப் பட்டியலில் சட்டத் தரணி பௌசர் முஸ்தப்பாவைச் சேர்த்துக் கொள்வதற்குப் பிரதமர் இணங்கியதையடுத்து இ.தொ. காங்கிரஸ் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

## தமிழரின் அபிலாசைகள் குறித்து எனக்கு எதுவித அக்கறையுமில்லை

### வீ. ஆனந்தசங்கரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழர்களின் அரசியல் அபிலாசைகள் குறித்து எனக்கு எதுவித அக்கறையும் இல்லையென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் பொதுத் தேர்தலில் சுயேட்சையாக தான்போட்டியிடப் போவதாக ஆனந்தசங்கரி அறிவித்துள்ளார். இவரின் இந்நிலைப்பாடு தொடர்பாக சந்தித்துக் கலந்துரையாடச் சென்ற வடபிராந்திய- யாழ்.ஆங்கில மருத்துவசங்கப் பிரதிநிதிகளிடமே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

நேற்று மாலை 2.00மணியளவில் ஆனந்தசங்கரியைச் சந்தித்த மேற்படி மருத்துவசங்கத் தலைவர் செ.பத்மநாதன் செயலாளர் வைத்திய கலாநிதி ரட்ணம் ஆகியோர்:தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளை அனுசரித்தும் தமிழினத்தின் நல்ல எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டும், அரசியலில் ஈடுபடுமாறு கோரினர்.

இதுகேட்டு சீற்றமடைந்த ஆனந்தசங்கரி தமிழர்களின் அபிலாசைகள் குறித்து நான் எவ்வித அக்கறையும் கொள்ளமாட்டேன்: எனது தனிப்பட்ட கொள்கை ரீதியிலேயே அரசியல் நடத்துவேன், எனது கொள்கையில் மாற்றம் இல்லை எனக்கு அரசியல் லாபமே முக்கியம், தமிழர்களின் பிரச்சினைகள் குறித்து கவலைகொள்ளப் போவதில்லை எனவும் தெரிவித்ததுடன், அக்கலந்துரையாடலில் இருந்து

(10ஆம் பக்கம் பார்க்க)

## வன்னி கூட்டமைப்பு வேட்பாளர்கள் எழிலனுடன் சந்திப்பு

(வவுனியா செய்தியாளர்)

எதிர்வரும் பொதுத் தேர்தலில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட உள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்கள் வவுனியா மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளரைச்சந்தித்து, கலந்துரையாடியுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் வன்னி மாவட்டத்தில் போட்டியிட உள்ள வேட்பாளர்கள் நேற்று, மாலை 6.30 மணியளவில் வவுனியா மாவட்ட அரசியல்துறை செயலகத்திற்கு சென்று அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் அவர்களைச் சந்தித்து, கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பின் போது தமிழ்த்

(10ஆம் பக்கம் பார்க்க)

## அரசாங்கத்தின் நடவடிக்கையைக் கண்டித்து மட்டு.வில் மனிதச் சங்கிலிப் போராட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் மாபெரும் மனிதச் சங்கிலி எதிர்ப்புப் போராட்டத்தினை மட்டக்களப்பு மாணவ சமூகத்தினர் நடத்தவுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்டம் போரினால் பாதிக்கப்படாத மாவட்டமாகவும்கல்வியில்முன்னேறிய மாவட்டமாகவும், சிறிலங்கா அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டதை ஆட்சேபித்தே, எதிர்வரும் மார்ச்மாதம் 2ம் திகதி மாபெரும் எதிர்ப்புப் போராட்டத்தினை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடத்தவுள்ளனர்.

சிறிலங்கா அரசின் இந்த நடவடிக்கை காரணமாக மட்டு மாவட்டத்தில் பல்கலைக்கழக அனுமதி மற்றும் கல்வியற்கல்லூரி அனுமதி உயர்கல்வி நிறுவனங்களுக்கு செல்லும் மாணவர்களின் வீதம் குறைந்து வருவதாகவும் இதனால் கல்விச் சமூகத்துக்கு இழப்பு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## புலிகள்-கண்காணிப்புக் குழுவினர் விளக்குவைத்த குளத்தில் சந்திப்பு

விளக்குவைத்த குளம் பகுதியில் நேற்று விடுதலைப்புலிகளுக்கும் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையே சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

காலை ஒன்பது மணிக்கு இடம்பெற்ற இச்சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் தமிழீழ காவல்துறை சிறப்புப் படையணி தளபதி திரு.லலித், விளக்குவைத்தகுளம் முன்னரங்கநிலைகளுக்கான பொறுப்பாளர் திரு.மாறன், கண் காணிப்புக் குழு தரப்பில் வவுனியா மாவட்ட பிரதிநிதிமாயாரிவிட்டா அவரது உதவியாளரும் கலந்து கொண்டனர். இதில் முன்னணி நிலைகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.



## இன்று சிங்கள தேசத்தில் பாரிய மாற்றம் ஏற்பட்டு குழம்பிப் போயுள்ளது

### -க.வே.பாலகுமாரன் தெரிவிப்பு

இன்று சிங்கள தேசத்தில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது. சிங்கள தேசம் குழம்பிப் போயுள்ளது. செய்வது அறியாது திணறிநிற்கின்றது. எனவே இக்கால கட்டத்தில் எமது மக்கள் சிந்தித்து செயற் பெற வேண்டும் அந்தக்கால கட்டம் இதுவேதான் என விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே. பாலகுமாரன் தெரிவித்துள்ளார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் இரண்டாவது ஆண்டு நிறைவு சமகால அரசியல் நிலைகுறித்து கருத்தரங்கு நேற்று கிளி. மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இதில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் செங்கதிர் தலைமையில் நேற்றுப் பகல் 10.00 மணிக்கு நடைபெற்ற மேற்படி நிகழ்வில் மங்கலவிளக்கினை கிளி.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம், தமிழீழ அரசியல்துறைமகளிர் பொறுப்பாளர் தமிழினி, கிளி.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவை செயலர் ஏ.வி.கே. மாணிக்கம் ஆதியோர் ஏற்றிவைக்க தமிழீழ தேசியக் கொடியினை கிளி.மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் முரளி ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து கருத்துரைகளை கரைச்சிப் பிரதேச செயலர் பொன் நித்தியானந்தன், கிளி.வலய கல்விப பணிப்பாளர் ப.அரியரத்தினம்,

(10ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**பி. வி. ஆர். நகைமாடம்**

1990 ஆம் ஆண்டிற்குப் பிற்பாடு மீண்டும் முல்லைத்தீவில் அதே பழையஇடத்தில் 15.02.2004 தொடக்கம் இயங்கி வருகின்றது. என்பதனை வாடிக்கையாளர்களுக்கு மனமகிழ்வுடன் அறியத்தருகின்றோம். உரிமையாளர் ஆர்.கிருஸ்ண சாமி (P.V.R.) P.V.R.நகைமாடம், முதன்மைச்சாலை,முல்லைத்தீவு. (சி-7162)

**காணி விற்பனைக்கு**

மல்லாவியில் புகழேந்தி நகரில் (1ஆம் யூனிற்) நமணன்குளத்தில் வீடு கிணற்றுடன் கூடிய 1 1/4 ஏக்கர் தென்னம் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு து. சிரேஸ்கரன் சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி. T.P. 0602213215, T.P. 0712373352. (4235)

**N.E.C**

**விசேட வகுப்பு**

ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கான விசேடவகுப்பு நடைபெறும்கின்றது ஆசிரியர் திரு.சு.சரவணபவன்(B.sc) வெண்ணிலா கல்விநிலையம்,மல்லாவி. (4108)


# தேசிய பெருவிளையாட்டுப் போட்டியில் நேற்று...

(அலுவலகசெய்தியாளர்)

மூன்றாவது தமிழீழ தேசிய பெருவிளையாட்டுப் போட்டியின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் நேற்றுக்காலை பெருவிளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

தேசியக்கொடியினை சாள்ஸ் அன்ரனிப் படைப்பிரிவின் தளபதிகளில் ஒருவரான லெப்.கேணல் கோவித் ஏற்றிவைத்தார். மாவீரர் திருவுருவப் படங்களுக்கு சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் தளபதிகளில் ஒருவரான அமுதாப், யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி இணைப்பாளர் இளம்பிறைநாதன், தமிழீழ விளையாட்டுத்துறை மகளிர் பொறுப்பாளர் ஆரபி, தமிழீழ காவல்துறையைச் சேர்ந்த கிருபா, வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி உடற்கல்வி ஆசிரியை சுகுணா, யாழ். மாவட்ட நடுவர்களான ஜெயவிந்தன், ஆனந்த ஜெயகரன், பீதாம்பரம், திருமலை உதைபந்தாட்ட அணித்தலைவர் வசந்தன் ஆகியோர் ஈகச்சுடர் ஏற்றி மலர்மாலை அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகின கபடி பெண்களுக்கான போட்டியில் முல்லை அணி 65-21 என்ற புள்ளி அடிப்படையில் மன்னார் அணியை வென்றது.

கபடி ஆண்களுக்கான போட்டியில் யாழ். அணி மட்டு.அணியை 42-22 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. இப்போட்டிகளின் நடுவர்களாக திருவாளர்கள் ஜஸ்ரின், அபேகுணசேகரா ஆகியோர் கடமையாற்றினர்.

பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் மன்னார் அணி 2-0 என்ற செற் கணக்கில் வவுனியா அணியை வென்றது. திருகோணமலை அணி முல்லை அணியை 2-0 என்ற செற் கணக்கில் வென்றது. இப்போட்டிக்கு நடுவர்களாக திருவாளர்கள் மனோகரன், செல்வராசா ஆகியோர் கடமையாற்றினர்.

தாச்சி ஆண்களுக்கான போட்டியில் முல்லை அணி, வவுனியா அணியை 12-11 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. தாச்சி பெண்களுக்கான போட்டியில் வவுனியா.அணி மன்னார் அணியை 12-07 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது. போட்டிக்கு நடுவர்களாக க.ச.சசிசராஜ், கா.ஜெயசீலன் ஆகியோர் கடமையாற்றினர்.

நேற்றைய துடுப்பாட்டப் போட்டி மட்டு-முல்லை அணிகளுக்கிடையே நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்றமுல்லை அணியினர் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தனர். எனவே மட்டு அணி முதலில் துடுப்பெடுத்தாடியது. 23.3 ஓவரில் சகல இலக்குகளையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது. மட்டு அணி ரூபராஜ 35 ஓட்டங்களையும் மோதீஸ் 27 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் சருணாவன், சுபாஸ்கரன் தலா மூன்று விக்கெட்டுகளையும் இழந்து மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய முல்லை அணியினால் 22-01 ஓவரில் சகல இலக்குகளையும் இழந்து 57 ஓட்டங்களையும் மட்டுமே பெற முடிந்தது. சுபாஸ்கரன் 47 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் அருண்பிரசாத் 12 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், கஜன் ரூபராஜ் தலா இரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இப்போட்டியில் 56 ஓட்டங்களால் வெற்றிபெற்ற மட்டு அணி அரையிறுதிக்குத் தெரிவானது.

இப்போட்டிக்கு நடுவர்களாக திருவாளர்கள் சிவதரன், ஜேக்கப் ஆகியோரும் நிதர்சனம் நிறுவனத்தின் அனுசரணையுடன் தொலைக்காட்சி நடுவராக இ.சிறீதரனும்கடமை யாற்றினர்.(சோ)

# மேலும் 14தமிழர்கள் நேற்று தாயகம் திரும்பினர்

இந்தியா திண்டுக்கல் மாவட்டத்தில் வத்தளம் குன்று என்றும் அகதி முகாமில் இருந்த மேலும் 14 தமிழ அகதிகள் தாயகம் திரும்பியுள்ளார்கள் இவர் களில் 06 பேர் ஆண்களும் 04 பேர் பெண்களும்04பேர் குழந்தைகளும் ஆவர்.இவர்களை நேற்று முன்தினம் அதிகாலை தலைமன்னார் பொலிஸ் நிலையத்தில் அனுமதித்து நேற்று மன்னார் விசேட நீதிமன்றத்தில் முன்னிலைப் படுத்தியவேளை மன்னார் நீதிபதி அத்துல்லா அவர்களின் சொந்த இடமான பேசாலைக்கு அனுப்பிவைத்தார். (மி)

# தேர்தல் பணிகளை ஆற்றும் ஆளணியினரின் விபரம் கோரல்

(வவுனியா செய்தியாளர்)

வன்னித்தேர்தல் மாவட்டத்தில் தேர்தல் பணிகளை ஆற்றுபவர்களின் விபரங்களை வன்னித்தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் கோரியுள்ளார்.

வன்னித்தேர்தல் மாவட்டத்தில் உதவித் தெரிவித்த கட்சி அலுவலர், சிரேஷ்ட தலைமை தாங்கும் அலுவலர், எழுதுவினைஞர் ஆகிய பணிகளை ஆற்றத்தகுதி வாய்ந்தவர்களின் விபரங்களை வன்னி தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலர் க.கணேஷ் கோரிஉள்ளார்.

வன்னத்தோதல் மாவட்டத்தின் சகலஉள்ளூர்த்திணைக்களத் தலைவர்கள், பாடசாலைகளின் அதிபர்கள், உள்ளூர்அதிகாரசபைகளின் செயலாளர்கள் ஆகியோருக்கு வன்னித்தேர்தல் தெரிவித்தாட்சி அலுவலர் சுற்று நிருபம் மூலம் இவ்விபரங்களைக் கோரியுள்ளார். (10)

# கட்டாக்காலி கால்நடைகளால் முள்ளியவளையில் மக்கள் சிரமம்

முள்ளியவளைப் பிரதேசத்தில் கட்டாக்காலி கால்நடைகளினால் மக்கள் தொடர்ந்தும் அவலப்பட்டு வருகின்றனர்.

முள்ளியவளை பிரதேசத்தில் முள்ளியவளை பிரதான வீதி, வற்றாப்பளைப் பிரதான வீதி, தண்ணீரூற்று பிரதான வீதி, குமுளமுனைப்பிரதானவீதிகளில் ஆங்காங்கு கூட்டம்கூட்டமாகபகல்இரவு வேளைகளில் கிடப்பதால் வீதியூடான போக்கு வரவு சிரமத்துக்குள்ளாகி வருவதுடன் இரவில் கூட்டமாக வீதியில் கிடக்கும் கால் நடைகள் அவ்விடங்களை அசிங்கப்படுத்தி விடுவதால் அப்பகுதியூடாக பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

முள்ளியவளை அர சினர் வைத்தியசாலைக்கு முன்பான பிரதான வீதியில் முள்ளியவளை மாவீரர் துயிலும் இல்லத்தின் முன் வீதி தண்ணீரூற்று நெடுங்கேணி சந்தி, தண்ணீரூற்று ஆலடிச் சந்தி, கணுக்கேணி வீதி முள்ளியவளை பொதுச்சந்தை முன் வீதி, முள்ளியவளை காட்டு விநாயகர் கோவிலடிச்சந்தி,காட்டு விநாயகர் கோவிலுக்கு முன்னாள் வற்றாப்பளை றாண்ஸ்போமர் சந்தி.ஆகிய இடங்களில் தினசரி சுமார் 750க்கும் மேற்பட்ட கால்நடைகள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஆ)


## சாவு அறிவித்தல்

### தேவநாயகம் நாகம்மா

நெடுந்தீவு கிழக்கைப் பிறப்பிடமாகவும் ஒட்டறுத்தகுளம் கிராமத்தில் வசித்தவருமான காலஞ்சென்ற வைத்திய கலாநிதி தேவநாயகம் அவர்களின் அன்பு மனைவி நாகம்மா 22.02.04இல் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்ற ராஜேஸ்வரி ஜெசிந்தா, தேவநாயகம், ஜெயக்குமார், ரத்தினகுமார், காலஞ்சென்ற உதயகுமார், கலைவாணி, கலைமகள், அன்ரன்ஜீற் ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்ற அருளேஸ்வரன் காலஞ்சென்ற இராசலிங்கம், சிவஞானமதி, யோகுமாரி, தனபாக்கியம், மகேஸ்வரன், சுரேஸ் ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்றவர்களான முருகேசு, வள்ளியம்மை சண்முகநாதன், நாகமுத்து ஆகியோரின் சகோதரியுமாவார். அன்னாரின் நல்லடக்கம் 23.02.04 இன்று பி.ப 5.00மணிக்கு அனிஞ்சியம் குளத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
குடும்பத்தினர்.

(சி 4111)


## சிரமதானப்பணி

மல்லாவியில் அமைந்துள்ள மாணவர் அமைப்பின் முரளி கணினி பயிற்சி நிலைய வளாகத்தில் கடந்த புதன்கிழமை சிரமதானப் பணி மேற்கொள்ளப்பட்டது. இச்சிரமதானப்பணியில் கல்வி நிலையத்தில் கல்வி கற்கும் மாணவர்கள் கலந்து கொண்டனர் (24)

## விபத்தில் காயம்

நேற்று 9.30 மணியளவில் மன்னார் சின்னக்கடை புனித மரியன்னை ஆலயத்திற்கு முன்பாக இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் காயமடைந்தார். ஞாயிற்றுக்கிழமை திருப்பலி பூசையை வழிபட்டுவிட்டு திரும்பிய எஸ். செபஸ்தியாம்பிள்ளை (வயது 79)என்பவர் அவ்வழியால் வந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் தலையில் பலத்த காயங்களுக்குட்பட்டு ரத்தப்பெருக்குடன் அனுராதபுர வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளார். (மி)

## கொடுப்பனவு வழங்கல்

(பளை)

பளை தபாலகத்திலும் இயக்கச்சி சோரன்பற்று, தாளையடி, செம்பியன்பற்று, ஆழியவளை, முள்ளியான் போன்ற உபதபாலகங்களிலும் தை-மாசி இரு மாதங்களுக்காகிய மாதாந்த கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. (11)

## வற்றாப்பளை பிரதானவீதி மோசமான பாதிப்பு

வற்றாப்பளை பிரதான வீதி குன்றும் குழியுமான நிலையில் உள்ளதால் அவ்வீதி ஊடான போக்குவரவில் மக்கள் அவலப்பட்டு வருகின்றனர்.

முள்ளியவளைப் பிரதேசத்தில் உள்ள மேற்படி பிரதான வீதியானது வீதி அபிவிருத்திதிணைக்களத்தின் ஆளுகைக்குட்பட்டதாகும். மேற்படி வீதியில் வற்றாப்பளை மாகாவித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள வீதி அதிமோசமான குன்றும் குழியுமாகவுள்ளதால் பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள் நாளாந்தம் விழுந்து எழும்பி செல்வதுடன் சிறுகாயங்களுக்கும் உள்ளாகி வருவதை அவதானிக்கமுடிகிறது.(ஆ)

## கோட்டைகட்டிய குளம்பகுதி தேசிய எழுச்சிப் பேரவை தெரிவு

கோட்டைகட்டிய குளம் கிராம சேவையாளர் பிரிவின் ஊரக தேசிய எழுச்சி பேரவை தெரிவு கூட்டம் கோட்டை கட்டிய குளம் பொது நோக்கு மண்டபத்தில் கிராம சேவையாளர் கி.சண்முகநாதன் தலைமையில் கடந்த வாரம் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கருத்துரையை அரசியல் துறையை சேர்ந்த பெ.தனம் வழங்கினார்.தொடர்ந்து ஊரக தேசிய எழுச்சிப் பேரவை தெரிவு இடம் பெற்றது செயலாளருமான த.சன்முகரெத்தினம் துணைச்செயலாளராக ம.கணேசலிங்கம் பொருளாராக உதயகுமார் ஆகியோருடன் 6பேர் கொண்ட உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர் (24)

# கசிப்பு விற்பனை செய்தோர் காவல்துறையினரால் கைது

(திருவையாறு)

விசுவமடு காவல் பணிமனையினரால் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். தருமபுரம் பகுதியில் குறித்த நபர்களிடம் இருந்து 10 லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டதுடன் சட்ட நடவடிக்கைகளுக்காக முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப் பட்டுள்ளனர்.

இவ்வாறான குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் காவல் பணிமனைப் பொறுப்பாளர் தலைமையில் இரவு நேர வீதி ரோந்தில் தொடர்ச்சியாக காவல் துறையினர் ஈடுபட்டுள்ளனர். (15)

# பாடசாலை இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டிகள்

(வட்டக்கச்சி)

கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை இல்ல மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டி கடந்த வியாழக்கிழமை பி.ப. 1.30 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் பாடசாலை முதல்வர் திரு. சி.பாலகிருஸ்ணன் தலைமையில் ஆரம்பமானது. முதன்மை விருந்தினராக பிரதிக்கல்விப் பணிப்பாளர் (கிளிநொச்சிவலயம்) க.வைரமுத்து அவர்களும், சிறப்பு விருந்தினராக கோட்டக்கல்வி அலுவலர் (கரைச்சி) வி.சிற்றம்பலம் அவர்களும் கலந்து கொண்டனர்.

தேசியக் கொடியினை வட்டக்கச்சிப் பிரதேச காவல் பணிமனைப் பொறுப்பாளர் சுந்தரலிங்கம் அவர்களும் பாடசாலைக் கொடியினை வித்தியாலய முதல்வர் அவர்களும் விளாச்சுடரினை விளையாட்டுத்துறை ஆசிரியர் திருமதி ஜெ.நளாயினி அவர்களும் ஏற்றிவைத்தனர்.

ஆசியுரையினை முதன்மை விருந்தினர் வழங்கினார். இடைவேளை நிகழ்வாக இசையும் அசைவும் பார்வையாளர்களின் உள்ளத்தைக்கவர்ந்தது வினோதஉடைப் போட்டியும் நடைபெற்றது. 590 புள்ளிகள் பெற்று வஞ்சி இல்லம் 1ஆம் இடத்தையும் பெற்றது.

□ □ □

துணுக்காய் அ.த.க. பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டி கடந்த 20ஆம் திகதி பாடசாலை அதிபர் திருமதி யோகராணி தில்லைநாதன் தலைமையில் பி.ப.1.45 மணிக்கு இடம் பெற்றது.

தி.பகீரதன் ஆகியோர் தேசியக் கொடியை துணுக்காய் பிரதேச அரசியல் துறைப் பொப்பாளர் த.தர்மேந்திரா ஏற்றிவைத்தனர். பாடசாலைக் கொடியினை பாடசாலை முதல்வரும் இல்லக் கொடியினை இல்ல ஆசிரியர்களும் ஏற்றிவைத்தனர் மாணவர்களின் விளையாட்டு நிகழ்வுகள் ஆரம்பமானது. போட்டியில் சேரன் முதலாம் இடத்தையும் பாண்டியன் 2 ஆம் இடத்தையும் சோழன் 3 ஆம் இடத்தையும் பெற்றுள்ளன. (12,24)

## நினைவு நிகழ்வு

சாரணர் இயக்கத்தின் தந்தையும் அதை ஆரம்பித்து வைத்தவருமான பேடன் பவுல் பிரபுவின் பிறந்த தினத்தை நேற்று மன்னாரில் சாரணர்கள் நினைவு கூர்ந்தனர்.

மடு மற்றும் மன்னார் கல்வி வலயங்களைச் சேர்ந்த சாரணர்கள் மன்னார் நகரில் பேடன் பவுல் பிரபுவின் உருவப்படம் மற்றும் பதாகைகள் தாங்கி ஊர்வலம் சென்றதுடன் நினைவுரைகளும இடம்பெற்றது. (மி)


மாங்குளம் நகரில் புதிய
கட்டடத்தில் கால்பதிக்கும்
துணுக்காய் வலய கல்வி அலுவலகத்தை

MULLAIVAY CENTRAL COLLEGE

## வாழ்த்துகின்றோம்

புதிதாய் கோவில் செய்து
வாசல் திறக்கும்
துணுக்காய் கல்விவலயமே
கல்வியும் கலையும்
கற்பண்புமே நிறைந்தது
எங்கள் கண்ணென ஒளிரும்
நாம் மாணவர் தம்மை இங்கு
வல்லவராக்கும் அருங்கல்விப்
பணியில் சிறக்க எங்கள்
அன்புடையோர் வாழ்த்துக்கோடி
அள்ளியே வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மு.மல்லாவி மத்திய கல்லூரி

(4109)

# சதாமை செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் இரகசிய சிறைக்குள் சென்று சந்திப்பு!

## -குடும்பத்தினருக்கான கடிதம் கையளிப்பு

அமெரிக்காவினால் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஈராக்கின் முன்னாள் சனாதிபதி சதாம் ஹுசைனை சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகள் பார்வையிட்டுள்ளனர்.

சதாம் ஹுசைன் கைது செய்யப்பட்டபின்னர் வெளியாட்கள் பார்வை இடுவது இதுவே முதல் தடவையாகும்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இந்தச் சந்திப்பின் போது சதாமைப் பார்வையிட்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப்பிரதிநிதிகளில் ஒருவர் மருத்துவராவார்.

இவர் சதாமின் உடல் மற்றும் உளரீதியான தன்மைகளைக் கண்டறியும் விதத்தில் பரிசோதனைகளை செய்ததாக ஜெனிவாவில் உள்ள செஞ்சிலுவைச்சங்கத் தலைமையகப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஜெனீவாப்பிரகடனத்திற்கு அமைய யுத்தக்கைதி ஒருவரைப் பார்வையிடும்வகையிலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டதாக தெரிவித்த இந்த சர்வதேச செஞ்சிலுவைச்சங்க ஜெனீவா பிரதிநிதி பார்வையிட்ட செஞ்சிலுவைச்சங்கப்பிரதிநிதிகளுக்கு சதாம் ஹுசைனின் உடல் நிலை பற்றியோ அல்லது அவர் வைக்கப்பட்டிருக்கும்இடம்பற்றியோ தகவல்களை வெளியிட அனு மதி இல்லை எனவும் தெரிவித் துள்ளார்.

இதேவேளை தன்னைச்சந்தித்த செஞ்சிலுவைச்சங்க சர்வதேசப் பிரதிநிதிகளிடம் ஜோர்தான் தலைநகர் அம்மானில் தற்சமயம் வசிக்கும் தனது குடும்பத்தினரிடம் கையளிக்கும்படி கடிதம் ஒன்றினை சதாம் கொடுத்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சதாம் ஹுசைன் கைது செய்யப்பட்டு இரண்டு மாதங்களுக்கு மேல் கடந்து விட்ட நிலையில் இந்தச்சந்திப்புக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சதாம் கைது செய்யப்பட்ட உடனேயே அவரைப்பார்ப்பதற்கான அனுமதியை சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அணுவாயுத ரகசியங்கள் கடத்தலில் காதிர்கான் பலிக்கடாவானார்

## -பெனாசீர் பூட்டோ சீற்றம்

அணுவாயுத ரகசியங்களைக் கடத்தியதில் அணுவிஞ்ஞானி அப்துல் காதிர்கான் பலிக்கடா ஆக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாசீர் பூட்டோ குற்றம் சாட்டியுள்ளார்.

வாஷிங்டன் ரைம்ஸ் பத்திரிகைக்குப் பேட்டியளித்த அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்:- அணு விஞ்ஞானி அப்துல் காதிர் கான் திடீரென அணுவாயுத ரகசியங்களைத் தாமே விற்கத் தொடங்கிவிட்டார் என்று கூறப்படுவதை, பாகிஸ்தானியர் யாருமே நம்பத் தயாரில்லை என்று கூறியுள்ளார். இராணுவத் தலைவர்கள் இதில் சம்பந்தப்பட்டுள்ளதாகவும் அதனை மூடி மறைப்பதற்காகவே அணு விஞ்ஞானி காதிர்கான் பலிக்கடா ஆக்கப்பட்டுள்ளார் என்றும் பெனாசீர் பூட்டோ கூறியுள்ளார்.

### பாதுகாப்பு உத்தி குறித்தும் பேச்சு

பாகிஸ்தானும் அமெரிக்காவும் வெள்ளிக் கிழமை இஸ்லாமாபாத்தில் பாதுகாப்பு, மற்றும் பாதுகாப்பு உத்தி குறித்தபேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளன.

அண்மையில் உலகில் ஏற்பட்டுள்ள ஆயுதக் கட்டுப்பாடு தொடர்பான நிலைகளைக் கவனத்தில் கொண்டு தொடர்ந்து பேச்சு வார்த்தைகளை நடத்திட இரு நாடுகளும் இணங்கியுள்ளன.ஈரான் லிபியா, வடகொரியாவிற்கு அணுவாயுதங்களின் நுட்பங்கள் கடத்தப்பட்டதாக தகவல்கள் அம்பலமாகியுள்ளதையடுத்து பாகிஸ்தானின் அணுவாயுதங்கள் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளனவா எனும் கவலை ஏற்பட்டுள்ளது. இந்த அச்சத்தினால் யப்பானும், பாகிஸ்தானுடன் பாதுகாப்புப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கவுள்ளது.

# கெயிட்டி சமாதான முயற்சிகள் பின்னடைவு பதவியை தக்கவைக்க சனாதிபதி முயற்சி!

## - கிளர்ச்சியாளர் பலம் அதிகரிக்கிறது

**கெயிட்டியில் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக்கொண்டு வரவென்று உலக நாடுகள் மேற்கொண்ட முயற்சிகள் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை. இந்நிலையில் கிளர்ச்சியாளர் கையோங்கி வருகின்றது.**

கெயிட்டியில் அரசுக்கும், கிளர்ச்சியாளர்களுக்குமிடையே ஏற்பட்டுள்ள ஆயுதப்போராட்டத்தை தீர்த்து வைப்பது என்று அமெரிக்கா,கனடா, பிரான்ஸ் நாட்டுப்பிரதிநிதிகள் மேற்கொண்ட முயற்சிகள் எதிர்பார்த்தபடி நல்லவிதமான முடிவுகளை ஏற்படுத்தவில்லை.

கெயிட்டி சனாதிபதி அரிஸ்டைட் சமாதானத்திற்கு விரும்பியுள்ளார். ஆனால் ,சமாதானத்திற்கு முன்னர் சனாதிபதி பதவிவிலக வேண்டுமென்று கிளர்ச்சியாளர்கள் கூறியுள்ளார்கள்.

கனேடியப் பிரதிநிதிகள் உட்பட மூன்று நாடுகளின் பிரதிநிதிகள் ஒருநாள் சமாதானப் பேச்சு வார்த்தைகளை நடத்தியபோதும் சமாதான உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு கிளர்ச்சியாளர்கள் மறுப்புத் கூறிவிட்டனர். அரசியல் வாதிகள், வர்த்தகப்பிரமுகர்கள், சிவில் நடவடிக்கையாளர்கள், மதத் தலைவர்கள் ஆகியோர் அரசுக்கு எதிரான தரப்பில் இடம் பெற்றுள்ளனர். பெப்ரவரி 5ஆம் திகதி கெயிட்டியின் மேற்குப்புறநகரில் ஆரம்பமான ஆயுதப்போராட்டம் வடமேற்கு, மத்திய பகுதிகளுக்கும் தற்போது பரவியுள்ளது.

சனாதிபதி அரிஸ்ரைட்டின் இரண்டாவது சனாதிபதி பதவிக்காலம் 2006 ஆம் ஆண்டுடன் முடி வடையும் வரை தாம் பதவி விலகப் போவதில்லையென்று அவர் திட்டவட்டமாக அறிவித்துள்ளார்.

இருந்தபோதும் சமாதான நடவடிக்கையாளர்களின் சமாதானத் திட்டத்தை தாம் ஏற்றுக்கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார்.

புதிய பிரதமரையும் அமைச்சரவையையும் நியமிப்பதற்கான ஆலோசனைச்சபையை உருவாக்குதல், தீவிரவாதிகளை நிராயுதபாணியாக்குதல், நாட்டில் லஞ்ச ஊழலை ஒழித்துக் கட்டுதல் என பன உத்தேச சமாதான திட்டத்தின் முக்கிய அம்சங்களாகும்.



ஈரானில் நடைபெற்ற தேர்தலில் வாக்களிக்கக் காவல் இருக்கும் ஈரானியர் ஒருவர் அமெரிக்க எதிர்ப்புக் கோசங்களை எழுப்பியவாறு காணப்படுகிறார்.

# சூடான் அகதிகளிடையே மஞ்சள் காய்ச்சல் நோய்!

சூடானில் தங்கியுள்ள அகதி மக்களிடையே மஞ்சள் காய்ச்சல் நோய் ஏற்பட்டுள்ளது.

இந்த நோய் இரத்தப்பெருக்குடன் காய்ச்சலாக மக்களிடையே ஏற்பட்டுள்ளதையடுத்து, உலக சுகாதார நிறுவனம் விரைந்து துரித நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது. இந்த நோயை கட்டுப்படுத்தும் மருந்துகளை உலக சுகாதார நிறுவனம் சூடானுக்கு அனுப்பி வைத்துள்ளது.

# 2005 - ல் பிரிட்டிஷ் பொதுத் தேர்தல் மீண்டும் பதவிக்கு வர பிளேயர் ஆவல்!



(லண்டன்)

பிரிட்டனில் 2005 ஆம் ஆண்டு முற்பகுதியில் பொதுத் தேர்தல் நடத்த பிரதமர் ரொனிப்பிளேயர் உத்தேசித்துள்ளார்.

பிரதமர் ரொனிப் பிளேயருக்கு எதிர்க்கட்சிகளின் எதிர்ப்பு, ஈராக் யுத்தம் தொடர்பாக மக்களின் அதிருப்தி ஏற்பட்டுள்ள போதிலும், பிரதமர் ரொனிப்பிளேயர் மூன்றாவது தடவையும் பிரதமர் பதவிக்கு போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளார். அரசாங்கத்தை அமைப்பதற்கென்று தொழிற்கட்சி வழிநடத்திச் செயற்படும் என்று அவர் கூறியுள்ளார்.

பிரிட்டனில் பிரதமர் பதவியில் நீண்டகாலமாகப் பதவி வகித்துவரும் ரொனிப்பிளேயர் 18 வருடகாலமாக உழைத்து தொழில் கட்சியை முன்னணிக்கு கொண்டு வந்து 1997 இல் பெரும் வெற்றி பெற்றிருந்தார். மீண்டும் 2001 இலும் தொழில் கட்சி மாபெரும் வெற்றி பெற்றது.

2005 ஆம் ஆண்டின் முற்பகுதியில் மற்றுமொரு பொதுத்தேர்தலை நடத்துவது ரொனிப்பிளேயரின் திட்டமாகும்.

இதேவேளை அவரது 50 ஆவது பிறந்ததின கொண்டாட்டமாக அவரது பதவி விலகலை அறிவிக்க வேண்டுமென்று கட்சிகளின் வலியுறுத்தலை அவர் நிராகரித்துள்ளார்.

# அமெரிக்க அதிகாரிகள் சவுதி திரும்ப ஏற்பாடு

(வாஷிங்டன்)

சவூதி அரேபியாவுக்கான அமெரிக்கத் தூதரக அதிகாரிகளை மீண்டும் சவுதிக்கு அனுப்பி வைப்பதற்கு அமெரிக்கா நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் விரைவில் சவூதி அரேபியாவின் தலைநகர் றியாத்துக்கு செல்லவுள்ளார்கள்.

கடந்த வருடம் சவூதியில் தொடர் குண்டுவெடிப்புக்களில் அமெரிக்கர்களும் கொல்லப்பட்டனர். இதனால் அமெரிக்கா தனது சவூதிக்கான தூதரக அதிகாரிகளை வெளியேறுமாறு உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



தமது பதவிக்காலம் முடிய இருவருடங்கள் மட்டுமே உள்ள நிலையில் சுகட்காவின் ஆளுநர் தமது நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் வகையில் அந்நாட்டில் துருவ மான்களை பகிரங்கமாக மேய அனுமதித்துள்ளதையும் படத்தில் காண்க.

# ஐ.நா. அமைதிப் படையினரின் பணியை கிழக்குத் தீமோரில் தொடர வலியுறுத்து

கிழக்குத் தீமோரில் மேலும் ஒருவருட காலத்திற்கு ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படையினர் நிலைகொண்டிருக்க வேண்டுமென்று ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புப் பேரவையிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

கிழக்குத் தீமோரின் பேரவை உறுப்பினர்கள் சிலர் இதற்கு உடன்பட்டு வருகின்ற போதிலும் அந்த நாட்டின் நிர்வாகிகளும், ஐக்கியநாடுகளின் அதிகாரிகளும் இந்தக் கோரிக்கையினை விடுத்துள்ளார்கள்.

2002ஆம் ஆண்டு மேமாதம் போர்த்துக்கல்லின் காலணித்துவ ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் ஐக்கிய நாடுகளின் 191ஆவது அங்கத்துவ நாடு எனும் அந்தஸ்தை கிழக்குத் தீமோர் பெற்றுக் கொண்டது.

இந்த நிலையில் 2002ஆம் ஆண்டு மேமாதம் 20ஆம் திகதி தனது பணிகளை ஆரம்பித்த ஐக்கிய நாடுகளின் அமைதிகாக்கும் நடவடிக்கைகளைக் கடந்த வருடம் மேமாதம் முதலாம் திகதி முதல் கிழக்குத் தீமோர் நிர்வாகப் பேரவை நீடித்திருந்தது.

அமைதிகாக்கும் படையினரின் பணிகள் இவ்வருடம் மேமாதம் 20ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது.

இதன்படி மேமாதம் இறுதியிலேயே ஐ.நா.சபையின் பாதுகாப்புப் பேரவை இறுதி முடிவுகளை எடுக்கும் என்று கூறப்படுகின்றது.

# பழமைவாதிகள் வெற்றி

ஈரானில் வெள்ளிக்கிழமை நடத்தப்பட்ட தேர்தலில் பழமை விரும்பிகள் வெற்றி பெற்றுள்ளனர். இது அமெரிக்கா, இஸ்ரேல் இரு நாடுகளுக்கும் கிடைத்த தோல்வியாகும் என்று சனாதிபதி முகமட் கதாமி கூறியுள்ளார்.

தேர்தலில் 192 தொகுதிகளில் 133 தொகுதிகளில் பழமைவாதிகள் வெற்றி பெற்றுள்ளனர். 37 இடங்களில் சீர்திருத்த வாதிகளும், 17இடங்களில் சுயேட்சை வேட்பாளர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

மத அடிப்படையிலான சிறுபான்மைக்குழுக்களிலிருந்து 5 பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

இதுவரை பெண் பிரதிநிதி எவரும் தெரிவு செய்யப்படவில்லை என்றும் கூறப்படுகின்றது.

# சமாதான முன்னெடுப்பின் அவசியம் குறித்து சனாதிபதி, பிரதமருக்கு ஆர்மிரேஜ் அறிவுறுத்து

## தொலைபேசியில் தனித்தனியாக பேச்சு

(கொழும்பு)

**பொதுத்தேர்தல் மற்றும் இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கான சர்வதேச சமூகத்தின் உதவிகள் தொடர்பிலான பல் வேறு விடயங்கள் குறித்து அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் றிச்சர்ட் ஆர்மிரேஜ், சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் முக்கிய கலந்துரையாடல் ஒன்றை நடத்தியுள்ளார்.**

வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்ற இந்தத்தனித்தனி தொலைபேசி கலந்துரையாடல்களின் போது கொழும்பு அரசியலுடன் தொடர்புடைய பல்வேறு விடயங்கள் குறித்து பரஸ்பரம் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் இரண்டாம் திகதி இலங்கையில் நடைபெற இருக்கும் பொதுத்தேர்தல் நீதியாகவும், நேர்மையாகவும் நடைபெறுமென்பதே அமெரிக்காவின் எதிர்பார்ப்பு என்றும் இரு பிரதான கட்சிகளும் இது விடயத்தில் சனநாயக கோட்பாடுகளை மதித்து செயற்படவேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் பணிகளில் சர்வதேச சமூகத்தின் தற்போதைய பங்களிப்பு மற்றும் நிலைப்பாடு தொடர்பில் அபிப்பிராயத்தினை தெரிவித்திருக்கும் அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர்,

எதிர்காலத்தில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கும் அரசாங்கமொன்றிற்கே சர்வதேச சமூகத்தின் மகத்தான உதவிகள் தொடருமெனவும் அரசியல் இழுபறிகள் தொடருமாயின் வெளிநாட்டு நிதியுதவிகளை வழங்குவதில் சிக்கல் ஏற்படலாமென்றும் அழுத்தம் திருத்தமாகவும் கூறியுள்ளார்.

இலங்கையை மீளக்கட்டியெழுப்பும் பணிகளுக்கு ஒத்துழைப்பினைத் தொடர்ந்து வழங்க சர்வதேச சமூகம் எப்போதும் தயாராக இருப்பதாகவும் இலங்கையின் அரசியல் தலைமைகள் அதற்கான களநிலையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமெனவும் அமெரிக்க பிரதி வெளிவிவகார அமைச்சர் மேலும் வலியுறுத்தியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

# உவர்நீர்தடுப்பு அணைகள் பராமரிப்பின்றி விவசாயநிலங்கள் தரிசாக மாறும் அபாயம்!

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி தெற்குப்பகுதிகளில் உள்ள உவர்நீர்த்தடுப்பு அணைகள் நீண்டகாலமாகப் பராமரிப்புகள் ஏதுமற்றநிலையில் காணப்படுவதால் அப்பகுதி விவசாய நிலங்கள் தரிசுநிலங்களாக மாறிவிடும் அபாயம் தோன்றியிருப்பதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். மேற்படி பகுதிகளில் உவர் நீரேரிகளும, எவர் நீரோடைகளும் அதிகமாக காணப்படுவதால் இவ்வாறன உவர் நீரினை விவசாய நிலங்களுள் செல்ல விடாது தடுத்து பாரிய அளவிலான உவர் நீர்த்தடுப்பு அணைகள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தது.

ஆனால் கடந்தகால இராணுவ ஆக்கிரமிப்புக்களால் இப்பகுதிகளை இராணுவ பாதுகாப்பு வலயமாக படையினர் பிரகடனப்படுத்தியுள்ளதால் இங்கு மக்கள் நடமாட்டம் முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது இதன். காரணமாக மேற்படி உவர் நீதடுப்பு அணைகள் சரிவர பராமரிக்கப்படாதும் சேதமடைந் தும் காணப்படுகிறது.

இதனால் விவசாயநிலங்களுள உவர் நீர்புகுந்து நீண்டகாலமாக தேங்கிநிற்க வாய்ப்பு உருவாகியுள்ளதால் விவசாய நிலங்கள் உவர்நிலமாக மாறி பயிர் செய்ய முடியாத தரிசு நிலமாகமாறும் அபாயம் தோன்றியிருப்பதாக விவசாயிகள் கவலைதெரிவிக்கின்றனர்.(33)

# இராணுவ கட்டுப்பாடற்ற பகுதி வாக்காளர் வாக்களிப்பது எவ்வாறென்பதில் முடிவில்லை

## -வவுனியா அரச அதிபர் கே.கணேஸ்

(செட்டிகுளம்)

இராணுவ கட்டுப்பாடற்ற பகுதியைச் சேர்ந்த வாக்காளர்கள் எவ்வாறு வாக்களிப்பது என்பது தொடர்பில் இதுவரை எந்தவிதமான முடிவும் இல்லை என்று வவுனியா அரச அதிபர் கே. கணேஸ தெரிவித்தார்.

வன்னித் தேர்தல்தொகுதியில் வவுனியா வடக்கு, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டத்தின் பகுதிகள் இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளாக உள்ளன. இப்பிரதேச மக்கள் வாக்களிப்பது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் தீவிரமாக ஆராய்ந்து வருகிறார். இதுதொடர்பாக முடிவுகள் எதுவும் இதுவரை எமக்கு அறிவிக்கவில்லை.

வவுனியா மாவட்டத்தில் 100,185 வாக்காளர்களும், மன்னார் மாவட்டத்தில் 72,980 வாக்காளர்களும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 53,439 வாக்காளர்களுமாக மொத்தமாக 226,604 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளனர். வாக்களிக்க வவுனியாவில் 91 வாக்குச்சாவடிகளும், மன்னாரில் 68 வாக்குச்சாவடிகளும், முல்லைத்தீவில் 50 வாக்குச்சாவடிகளும் அமைக்கப்படவேண்டும்.

கடந்த தேர்தலில் இப்பகுதிகளில் குறைந்த அளவிலான மக்களே வாக்களித்தனர். இம்முறை மாற்றம் வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதி மக்களுக்கு கடந்த முறையை போன்று கொத்தணி முறையில் அமைக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. ஆனாலும் முடிவு இல்லை.ஓமந்தை சூனியப்பிரதேசத்தில் வாக்குச்சாவடி அமைக்கப்படுமா? என்று கேட்டபோது இதற்கான சாத்தியப்பாடுகள் குறைவு காரணம் சூனியப்பிரதேசம் 500 மீற்றர் தூரமானது இங்கு வாக்குச்சாவடி அமைப்பது என்றால் இருபக்கங்களிலும் வெடிப்பொருள் உண்டு வரும் மக்களை கட்டுப்படுத்தமுடியுமா? தெரியவில்லை. எனவே இதற்கான சாத்தியகுறைவே உள்ளது என்று வவுனியா அரச அதிபர் கே. கணேஸ் மேலும் தெரிவித்தார். (21)


## அறிவித்தல்

**கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் அனைத்து வாகனங்களுக்குமான சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கலும், ஆவணங்களை தவறவிடப்பட்ட அனைத்து தரவாகனங்களையும் பதிவதற்கான நடவடிக்கைகள் 28.02.2004ம் திகதி வரையும் தொடர்ந்து நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றேன்.**

**ஆகையினால் அவைகளுக்கான விண்ணப்பங்களை 28.02.2004ம் திகதிக்கு முன்பாக கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் உள்ள மோட்டார் வாகன போக்குவரத்துக் கிளையில் ஒப்படைக்குமாறு கிளிநொச்சி மாவட்டத்தினை நிரந்தரமாகக் கொண்ட விண்ணப்பதாரிகள் மட்டும் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.**

**தி. இராசநாயகம்,**
**அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-9301)


## குளோரின் இடல்

முல்லைத்தீவு நகர்ப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் கிராம ரீதியாக கிணறுகளுக்கு குளோரின் இடப்பட்டு வருகின்றது. இதில் கள்ளப்பாடு, வண்ணாங்குளம், மணற்குடியிருப்பு, முல்லை தெற்கு ஆகிய கிராம கிணறுகளுக்கு தற்போது குளோரின் இடப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (20)

# பொதியிடப்பட்ட பொருட்களில் கவனம் செலுத்த வேண்டுகை

(முள்ளியவளை)

முல்லைத்தீவு மாவட்ட தமிழீழ சுகாதார சேவையினரால் நிறைகுறைவான குளுக்கோஸ் கண்டுபிடிக்கப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தென்பகுதியில் இருந்து வன்னி பெருநிலப்பரப்புக்குள் கொண்டு வரப்படும் பொருட்களில் 100 கிராம் என பெட்டிகளில் குறிக்கப்பட்டு 100 கிராம் குளுக்கோஸ் என பணம் அறவிடப்பட்ட போதும் 100 கிராம் பெட்டிக்குள் 40 கிராம் குளுக்கோஸ் இருந்ததைக் கண்டுபிடித்த சுகாதார சேவையினர் சம்பந்தப்பட்ட விநியோகஸ்தரை கண்டு பிடித்து நிறைகுறைவான மோசடி செய்யப்பட்ட குளுக்கோஸினை திருப்பி தென்பகுதிக்குள் கொண்டு செல்லுமாறு பணித்துள்ளதுடன் எச்சரிக்கப்பட்டுள்ளதாகவும் கொள்வனவு செய்யும் வர்த்தகர்கள் கொள்வனவு செய்யும் போது பெட்டியில் அடிக்கப்பட்ட நிறையையும், பெட்டிக்குள் இருக்கும் பொருட்களின் நிறையையும் கவனித்து கொள்வனவு செய்யுமாறும் முல்லை மாவட்ட சுகாதார சேவை பொறுப்பாளர் கேட்டுள்ளார். (ஆ)

# தேசிய எழுச்சிப் பேரவை புதிய நிர்வாகத் தெரிவு

(மன்னார்)

மன்னார் தேசிய எழுச்சிப் பேரவை புனரமைப்பு நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் சின்னக்கடை தேசிய எழுச்சிப் பேரவை மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

இந்நிகழ்விற்கு சுப்பிரமணியம் தலைமை தாங்கினார். இதன் போது மன்னார் மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையைச் சேர்ந்த மரியதாஸ்பீரிஸ் உரையாற்றினார். விளக்க உரையினை த.கந்தவமாறன் நிகழ்த்தினர்.

இதன்போது புதிய நிர்வாகிகள் தெரிவும் இடம்பெற்றது.

செயலாளராக சற்குணராசாவும் இணைச்செயலாளராக இ.கனகசூரியனும், பொருளாளராக செ.குலவீரசிங்கமும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுடன் செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (மி)

# திடீர் பாராளுமன்ற கலைப்பால் சுற்றுலாத்துறை பாதிப்பு!

## அமைச்சர் காமினி லொக்குகே

(கொழும்பு)

பாராளுமன்றம் திடீரென்று கலைக்கப்பட்டதனால் சுற்றுலாத்துறைக்குப் பெரிதும் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்த சுற்றுலாத்துறை அமைச்சர் காமினி லொக்குகே, இந்தக் காலப் பகுதியில் எதிர்பார்க்கப்பட்ட உல்லாசப் பயணிகளின் வருகையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

சனவரி மாதம் 50 ஆயிரத்துக்கும் அதிகமான உல்லாசப் பயணிகள் வருகை தருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அரசியல் நெருக்கடி காரணமாக இதுவரை 49 ஆயிரத்துக்கும் குறைவானவர்களே வருகை தந்துள்ளனர். இந்தத் தொகை பெப்ரவரி மாத இறுதியில் மேலும் குறைவடையும் அபாயம் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.


## வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

அன்புடையீர்!

24-01-2004 சனிக்கிழமை மாலை 5.20 மணியளவில் இயற்கை எய்திய எங்கள் பாசமிகு சகோதரன் நாட்டுப்பற்றாளருமான அமரர் றோயல திரு.செல்லத்துரை யோகநாதன் ஆத்மா சாந்திக்கிரியை 23-02-2004 திங்கட்கிழமை மு.ப 10.00 மணியளவில் இல:-01 பாலிநகர் அமரர் இல்லத்தில் நடைபெறவுள்ளது. குறித்த ஆத்மா சாந்திக் கிரியைகளில் கலந்துகொண்டு அவரது ஆத்மா ஈடேற்றத்தின் பொருட்டுப் பிரார்த்தனை செய்வதுடன் மதியவுணவிலும் குடும்ப சமேதரராகப் பங்குபற்றும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்களை வேண்டுகிறோம்.

இல-01 பாலிநகர்,
வவுனிக்குளம். (4110)

தகவல் -
சகோதரர் ரவி குடும்பம்.



## கண்ணீர் அஞ்சலி

### அமரர் சின்னப்பிள்ளை தருமலிங்கம்

**3ஆம் வட்டாரம் முள்ளியவளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் வித்தியானந்தாக் கல்லூரி முன்னாள் எழுதுனருமான எங்கள் சங்கத்தின் முன்னாள் தலைவருமான சி.தருமலிங்கம் அவர்கள் 14.02.2004 அன்று கனடாவில் காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவரின் குடும்பத்தினருக்கு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**நிர்வாகிகள்,**
**காட்டாவிநாயகர் சி.க.கூ.சங்கம்,**
**முள்ளியவளை.**

(3989)

## - நியமனம் வழங்காமையை ஆட்சேபித்து -

# கிளிநொச்சி அஞ்சலக பதில் ஊழியர்கள் மார்ச்-1முதல் வெளிநடப்புப் போராட்டம்!

(அலுவலக செய்தியாளர்)

**பத்து வருடங்களுக்கும் மேலாக கிளிநொச்சி அஞ்சலகத்தில் பதிவு செய்யப்பட்ட பதில் சிற்றூழியர்களாகக் கடமையாற்றும் 21 பேர் இதுவரை தமக்கான நியமனங்கள் வழங்காமையை ஆட்சேபித்து எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி முதல் மூன்று நாட்கள் வெளிநடப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.**

மேற்படி ஊழியர்கள் தமது நிலை தொடர்பான மனு ஒன்றினை கிளிநொச்சி அரச அதிபர் ஊடாக சிறிலங்கா சனாதிபதி தபால் அமைச்சர் மற்றும் தொழிலமைச்சர், மனித உரிமைகள் ஆணைக்குழு என்பனவற்றிற்கும் அனுப்பிவைத்துள்ளனர்.

பாதிப்புக்குள்ளான இந்த பதில் கடமையாளர்களால் வெளியிடப்பட்ட மனு விபரம் வருமாறு.

கிளிநொச்சி அஞ்சலகத்திலும் அதன் கட்டுப்பாட்டுக்குக் கீழுள்ள உபதாபாலகங்களிலும் நிரந்தர வெற்றிடங்களை நிரப்பும் பதிற் கடமை செய்துவரும் பதிவுசெய்யப்பட்ட பதில் சிற்றூழியர்களாகிய நாம் எமது நிரந்தர நியமனம் 10 வருடங்களுக்கு மேலாகியும் வழங்கப்படாதமை குறித்து இம்மனுவைச் சமர்ப்பிக்கின்றோம்.

அஞ்சல் நிலையங்களுக்குச் சிற்றூழியர்களைச் சேர்க்கும் விதிகளின் பிரகாரம், பதிவுசெய்யப்பட்ட பதில்கடமை செய்பவர்கள், மூத்த பணியாளர் ஓய்வுபெறும் வேளை அந்த வெற்றிடங்களுக்கான நிரந்தர நியமனத்திற்கு முதுநிலைப் பிரகாரம் உரித்துடையோராவார். இந்த வகையில் எங்களுக்கு இயல்பாகவே இந்த நியமனங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் நாங்கள் வேறு தொழில் முயற்சிகளை நாடாது இருந்துவிட்டோம். எங்களிற் சிலர் ஐம்பது வயதையும் தாண்டிவிட்டநிலையில் இன்னும் நாட்கூலிக்கு பதில்கடமையே செய்துவருகிறோம்.

1992 மே.மாதம் செய்யப்பட்ட ஆளணி மறு ஆய்வின்போது கிளிநொச்சியினதும் உபதபால் கந்தோர்களினதும் சிற்றூழியர் எண்ணிக்கை வடபிராந்திய பிரதி அஞ்சல் அதிபர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டது. அங்கு இறுதிக் கணிப்பீடு செய்த வேளை கிளிநொச்சியின் கட்டுப்பாட்டிலுள்ள உப தபாலகங்களின் எண்ணிக்கை தவறுதலாக விடப்பட்டதால் 01.05.1992 தொடக்கம் ஆளணி எண்ணிக்கை தவறாகக் குறைக்கப்பட்டுள்ளது. நிர்வாகத் தவறொன்றிற்கு நாங்கள் இரையாகிவிட்டதால் இதைத் தயவுசெய்து கவனத்தில் எடுத்து நாங்கள் பதில் கடமை செய்யத் தொடங்கிய நாளிலிருந்து அமு லுக்கு வரும் விதத்தில் எங்கள் நியமனங்களை வழங்க உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நீண்டகாலமாக எங்கள் வாழ்வாதாரப் பிரச்சினை குறித்து மேலதிகாரிகள் கரிசனை கொள்ளாத காரணத்தினால் ஒரு மாத முன்னறிவித்தலுடன் 2004 மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு கடமையிலிருந்து விலகிநிற்க மனவருத்தத்துடன் முடிவெடுத்துள்ளோம். தயவுகூர்ந்து எங்களை இந்த இக்கட்டான நிலைக்குத் தள்ளிவிடாது எங்கள் நியமனங்களை விரைவில் வழங்குவதற்கு ஆவன செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்தியாவசிய சேவை ஒன்றில் பணிபுரியும் எங்கள் கையறு நிலையை கருத்திற்கொண்டு மேலதிகாரிகளுடன் இது குறித்து தொடர்பு ஏற்படுத்தி எமக்கு நீதி வழங்குமாறு மாவட்டத்தின் முதன்மை அதிகாரியான உங்களைப் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம். (சோ)

## பத்திரணவுக்கு வற்புறுத்தல்!

(கொழும்பு)

தென்பகுதி ஐ.தே. முன்னணி அமைச்சர் உட்பட ஒரு குழுவினர் முன்னாள் கல்வியமைச்சரான ரிச்சர்ட்பத்திரனவை தமது கட்சியில் இணையுமாறு விலியுறுத்தி வருகின்றனர். அவருக்கு தேசிய பட்டியலில் இடம் ஒதுக்கித் தருவதாகக் கூறி வற்புறுத்தினாலும் பத்திரன தாம் பொ.ஐ. முன்னணியை விட்டு விலக காரணம் எதுவுமில்லை என்று தெரிவித்துள்ளார்.

# விளையாட்டுத்துறை டிப்ளோமா 58 பேருக்கு பட்டமளிப்பு

(வவுனியா செய்தியாளர்)

தேசிய விளையாட்டு விஞ்ஞானத்துறை நிறுவனத்தினால் 2001-2002 கல்வி ஆண்டில் நடாத்தப்பட்ட விளையாட்டுத்துறை டிப்ளோமா பட்டபாடநெறியில் சித்திபெற்ற 58 பேருக்கு பட்டம் அளிக்கப்பட்டுள்ளது.



கொழும்பில் உள்ளதேசிய விளையாட்டு விஞ்ஞானத் துறை நிறுவனத்தில் நடைபெற்ற இவ்விழாவில் 4 தமிழ் மொழிமூலமாணவர்கள் பட்டம் பெற்றுள்ளனர்.

சிங்கள மொழிமூலம் நடாத்தப்பட்ட இப்பாட நெறியில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த முஸ்லிம் மகாவித்தியாலய ஆசிரியர் ஜனாப் A.M.சுபைர் விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தலைவர் மில்டன் அமர[illegible]க என்பவரிடம் இருந்து பட்டத்தினைப் பெற்றுக் கொள்வதனைப் படத்தில் காணலாம். (10)

# குடாநாட்டு வாக்காளர் அட்டைகள் விமானம் மூலம் எடுத்துவர ஏற்பாடு

## தபால்மா அதிபர் அறிவிப்பு

(வடமராட்சி)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலின்போது யாழ்.மாவட்ட தேர்தல் வாக்காளர் அட்டைகள் அனைத்தும் விமானப்படை விமானமூலமே எடுத்து வரப்படவுள்ளதாக தபால்மா அதிபர் கே.ஏ.எஸ். சேனாதீர அறிவித்துள்ளார். அரசு-புலிகளுக்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தையடுத்து யாழ். குடாநாட்டிற்கான தபாற் போக்குவரத்து தற்போது கண்டிவீதியூடாகவே இடம்பெற்று வருகையிலேயே அவர் இவ் வறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் குடாநாட்டிற்கான விஜயமொன்றை மேற்கொண்டு வருகை தந்திருந்த அவர் தபாலகங்கள் மற்றும் உப தபாலகங்களது தபால திபர்களை சந்தித்துப் பேச்சுக் களை நடாத்தினார். யாழ்நகரின் ஸ்ரான்லி வீதியிலுள்ள பிராந்திய தபால் திணைக்களத்தின் அலுவலகத்தில் இச்சந்திப்பு காலை 10.மணிக்கு இடம்பெற்றிருந்தது.

எதிர்வரும் பொதுத் தேர்தல் தொடர்பாகவும் அதில் தபால் திணைக்களத்தின் பங்களிப்புத் தொடர்பாகவுமே ஆராய அவர் வருகைதந்திருந்தார். அங்கு கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்; கொழும்பிலிருந்து விசேட விமானப்படை விமானம் மூலம் எடுத்துவரப்படும் வாக்காளர் அட்டைகளை தகுதிவாய்ந்த விமானப்படை அதிகாரியொருவர் பலாலியில் இயங்கிவரும் தபாலகத்தின் தபாலதிபரிடம் கையளிப்பார். பின்னர் அவரிடமிருந்து யாழ். மாவட்ட பிரதம தபாலகம் அவற்றைப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

அத்துடன் பலாலியிலிருந்து யாழ்.பிரதம தபாலகத்திற்கு வாக்காளர் அட்டைகளை எடுத்துவருவதிலும் போதிய பாதுகாப்பு நடவடிக்கைகளை கைக்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

இதவேளை தேர்தல் பணிகளின்போது தேவையான ஆளணிகளை பயன்படுத்தக் கூடியவாறாக உரிய பதிலாளர்களையும் பயன்படுத்தவும் அவர் தபாலதிபர்களுக்கு உரிய அனுமதியை வழங்கியிருந்தார்.

பின்னர் அவர் புதிதாகக் கட்டித் திறக்கப்படாத நிலையிலுள்ள பிரதம தபாலகத்தையும் சக அதிகாரிகள் சகிதம் நேரில் சென்று பார்வையிட்டார். அத்துடன் தபாற்சேவைகள் தொடர்பில் குடாநாட்டில் எதிர்கொள்ளப்படும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் தபாலதிபர்களிடம் அவர் கேட்டுத் தெரிந்துகொண்டிருந்தார் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (27)

# அதாவுல்லா குழுவினருக்கு தேசியப்பட்டியலில் இடம்!

## சனாதிபதி வாக்குறுதி

(கொழும்பு)

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசிலிருந்து பிரிந்துசென்று தற்பொழுது மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணியில் இணைந்துள்ள அதாவுல்லா குழுவினருக்கு தேசிய பட்டியலில் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவிகளை வழங்குவதற்கு சனாதிபதி தீர்மானித்துள்ளார்.

கடந்த வெள்ளியன்று நடந்த சந்திப்பில் சனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளதாக அதாவுல்லா கூறி உள்ளார்.

# கல்லூரி மைதானமருகே மிதிவெடிகளை அகற்ற சிறிலங்கா படையினர் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்-ஊர்காவற்துறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்திற்கு அருகே மிதிவெடி அபாயமுள்ள பிரதேசங்களில் இருந்து மிதிவெடிகளை அகற்றுமாறு அப்பாடசாலை நிர்வாகம் கோரிய போதும் படைத்தரப்பு மறுப்புத் தெரிவித்துள்ளது.

மேற்படி பாடசாலை மைதானத்தை மிக அண்மித்து காணப்படும் நிலப்பரப்பு மிகவும்மிதி வெடி அபாயமுள்ளதாகக் காணப்படுகிறது. இதனால் இங்கு பயிலும் மாணவர்கள் பாடசாலை மைதானத்துள் சென்று விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடப் பெரிதும் அஞ்சிவருகின்றனர்.

இந்நிலை மாணவர்களது இயல்பான கற்றல் மற்றும் விளையாட்டு செயற்பாடுகளைப் பாதிப்பதாக சுட்டிக்காட்டி பாடசாலை நிர்வாகத்தினர் இக்கோரிக்கையை விடுத்துவருகின்ற போதும் இப்பகுதியை அண்மித்து நிலை கொண்டுள்ள படையினரின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, மேற்படி பகுதிகளில் மிதிவெடி அகற்ற படைத்தரப்பு மறுப்புத் தெரிவித்து வருகின்றது. (33)

# தேர்தல் கடமைக்கு அரச வாகனங்கள்

(கொழும்பு)

பாராளுமன்ற பொதுத்தேர்தல் கடமைகளில் ஈடுபடுத்தும் பொருட்டு சகல திணைக்களங்களில் இருந்தும் வாகனங்களைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை தேர்தல் திணைக்களம் மேற்கொண்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க கூறியுள்ளார்.

22 மாவட்டங்களுக்கும் தேவையான வாகனங்களின் எண்ணிக்கை கணக்கிடப்பட்டு, சகல அமைச்சுக்கள, திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள் போன்றவற்றுக்குச் சொந்தமான அனைத்து வாகனங்களும் பெறப்பட்டு தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இது தொடர்பான அறிவுறுத்தல்களை தேர்தல் ஆணையாளர் சகல திணைக்களத்தலைவர்களுக்கும் அனுப்பி வைத்துள்ளார்.

## கண்காட்சி திகதிகள் மாற்றம்

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கம் நடத்தும் வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான விஞ்ஞான கண்காட்சிப்போட்டி நடைபெறும் நாட்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பெப்ரவரி 25,26,27 ஆம் திகதிகளில் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவிருந்த கண்காட்சி மார்ச் மாதம் 11,12,13 ஆம் திகதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# தனியார் ஊடகங்களூடாக பிக்குகளை பிரச்சாரத்திலீடுபடுத்த ஐ.தே.மு முயற்சி

## அலரி மாளிகைக்கு அழைத்துப் பேச்சு

(கொழும்பு)

தேர்தலில் போட்டியிடும் பிக்குமார்களை தொலைக்காட்சியில் தோன்றி நேர்காணல் நிகழ்வுகளில் பங்கேற்க இடமளிக்குமாறு தொலைக்காட்சி ஊடகப்பிரிவு தனியார் தொலைக்காட்சி பிரச்சாரப் பணிப்பாளர்களை பணித்துள்ளது. இது தொடர்பாக அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டு திட்டங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம் பிக்குகளைக் கொண்டு சிறந்த தேர்தல் பிரச்சாரம் ஒன்றை மேற்கொள்ள பிரதமர் தரப்பு உத்தேசித்துள்ளது.

அரச தகவல் ஊடகங்கள் சனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்து வருவதால் ஐக்கிய தேசிய முன்னணி தனியார் தகவல் ஊடகங்களை நாடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதிலும் சனாதிபதிக்கு எதிராக பிரச்சாரங்களில் ஈடுபட பௌத்த பிக்குகளுக்கு இதில் முதன்மையிடம் வழங்கவும் ஐ.தே.முன்னணி முயன்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 23.02.2004 திங்கட்கிழமை மாங்குளம் பிரதான வீதி அருகாமையில் திறந்து வைக்கப்படுகின்ற கல்வி வலயத்தினை

# வாழ்க வளர்கவென வாழ்த்துகின்றோம்!

வாழ்த்துகின்றோம் கல்விப் பூங்கா சிரசதனை



முந்தையர் கல்விமுறை மாற்றி
விந்தை பல படைக்க முனைந்து
கலைத்திட்ட அம்சம தை மாற்றி
கவின் கலைப் போதனையும் சேர்த்திட
தோன்றிய கல்வி வலயங்களில்
தோன்றும் போதே கல்விப்
பெருமை கொண்ட வலயமே
ஓங்கட்டும் உன் புகழ்
ஒளிரட்டும் அனைத்துச் செயற்பாடும்
வாழ்த்துகின்றோம் வாழ்கவென.

இந்திரா களஞ்சியம்
யாழ்சாலை
மாங்குளம்

சிகரம் புடைவையகம்,
யாழ்சாலை
மாங்குளம்

மாவடிப் பிள்ளையார்
பல்பொருள் வாணிபம்
யாழ்சாலை
மாங்குளம்

க.கவிதாசன்
காற்றுக்குழாய்
ஓட்டுத் தொழிலகம்
மாங்குளம்

மு.நாகரத்தினம்
(குடும்பத்தினர்)
அம்பகாமம்
மாங்குளம்

அவனி உதிரிகள்
வாணிபம்
யாழ்சாலை
மாங்குளம்

கி.சீமான்பிள்ளை
(குடும்பத்தினர்)
பிரதான வீதி
மாங்குளம்

வே.பாலச்சந்திரன்
(குடும்பத்தினர்)
உழவு இயந்திர
உரிமையாளர்
மாங்குளம்

வை.விஜயபாலன்
நல்லூரான் அரைக்கும்
ஆலை,பழைய கொலனி
மாங்குளம்

சி. கருணேஸ்வரன்
(குடும்பத்தினர்)
கொல்ல புளியங்குளம்
மாங்குளம்

சிவராசா
(குடும்பத்தினர்)
புதிய கொலனி
மாங்குளம்

S.C.சபந்தன்
(குடும்பத்தினர்)
தமிழீழ எழுச்சிப்பாடகர்
புதிய கொலனி
மாங்குளம்

தீன்சுவையகம்
யாழ்சாலை
மாங்குளம்

பொ. கருணாகரன்
சிற்றுண்டிச்சாலை
மு/மாங்குளம்
மகாவித்தியாலயம்

மு.இராஜலிங்கம்
(குடும்பத்தினர்)
புதிய கொலனி
மாங்குளம்

சோ.நாகேந்திரராஜா
இல-7,பழையகொலனி
மாங்குளம்

செ. சத்தியமூர்த்தி
(குடும்பத்தினர்)
துணுக்காய் வீதி
மாங்குளம்

வை.ஜெயபாலகிருஷ்ணன்
(குடும்பத்தினர்)
பழைய கொலனி
மாங்குளம்

கா. சோமநாதன்
(குடும்பத்தினர்)
கிராம அலுவலர்
பனிக்கன் குளம்
மாங்குளம்

க.சுந்தரலிங்கம்
(குடும்பத்தினர்)
புதிய கொலனி
மாங்குளம்

க.பஞ்சலிங்கம்
(குடும்பத்தினர்)
புதிய கொலனி
மாங்குளம்

ஐ.முருகானந்தமூர்த்தி
(குடும்பத்தினர்)
துணுக்காய்வீதி
மாங்குளம்

தா. சிறீஸ்கந்தராசா
(குடும்பத்தினர்)
பிரதானவீதி
மாங்குளம்

பாடசாலை அபிவிருத்திச்
சங்கம்
மு/பனிக்கன்குளம் அ.த.க.பா
பனிக்கன்குளம்,மாங்குளம்

கிராம அபிவிருத்திச்
சங்கம்
மாங்குளம்

மாதர்
கிராம அபிவிருத்திச்
சங்கம்
மாங்குளம்

அமரர் சிங்காரவேலு
அறிவகம்
மாங்குளம்

சனசமூக நிலையம்
மாங்குளம்

துணுக்காய் கல்வி வலய பணிப்பாளரையும் அனைத்து உத்தியோகத்தர்களையும்
வருக வருகவென வரவேற்கின்றோம்.

(C4255)

# யார் பொருத்தமானவர்?

சிறிலங்காவின் அரசியல் வரலாற்றில் ஒரு கட்சியில் பிரதமர் வேட்பாளர் ஒருவரை பெயரிடாது வேட்பாளர் நியமனப்பத்திரம் தாக்கல் செய்வது இதுவே முதல் முறையாக இருக்கும். ஐ.தே. முன்னணியைப் பொறுத்த வரையில் அந்தப் பிரச்சினை இல்லை. தற்போது உருவாக்கப்பட்டுள்ள ஐக்கிய சுதந்திர மக்கள் விடுதலை கூட்டணிக் குள்ளேயே இந்தப் பிரச்சினை தோன்றி யிருக்கின்றது.



“கூட்டணியில் பிரதமராக வரக்கூடிய வேட்பாளர் யார்?” பொதுத்தேர்தல் பற்றி சிந்திப்போர் பேசிக்கொள்ளும் விடயம் இதுவே. கூட்டணியின் பிரதம வேட்பாளர் யார் என்ற கேள்வி எழுப்புவதற்கு முன்பு ஏன் இன்னும் இவ்வாறான ஒருவரை தெரிவு செய்யவில்லை என்பதைப்பற்றி சிந்திப்போம். பிரதம வேட்பாளரை தெரிவு செய்து விட்டால் சிறில.சுதந்திரக்கட்சிக்குள் பிரச்சினை தோன்றும் என எண்ணுவோரும் உள்ளனர். அதுஉண்மையே. இவ்வாறான மோதல் ஒன்றுக்கு இடம் இருக்கவே செய்கின்றது. அது மகிந்த ராஜபக்சவுக்கும் அனுர பண்டாரநாயக்கவுக்கும் இடையில் ஏற்படக்கூடியது.

இந்த மோதலைத்தவிர்க்க சிறந்த வழி வேட்பாளர் தெரிவு நடைபெறாமல் இருப்பது. இதிலும் உண்மை இருக்கின்றது. பிரதம வேட்பாளர் தெரிவு நடைபெறாமல் இருப்பதால் தேர்தலின் பின்னர் பிரிந்து செல்லும் ஐ.தே.க வின் ஒரு பகுதியினருக்கு வாய்ப்பளிக்க முடியும். ஏனெனில் தேர்தலில் பெரும்பான்மை கிடைக்காத விடத்து பிரிந்து சென்று தம்மிடம் வருகின்ற (சிலவேளை) ஐ.தே.கவினரைக் கவர்ந்து ஆட்சியமைக்க சந்திரிகா திட்டமிட்டிருக்கலாம். அது மேற்படி பிரதமராகும் வேட்பாளர் ஒருவரை இதுவரை நியமிக்காததன் பலனைத் தரும் என்பது சந்திரிகாவின் கருத்தாகலாம். அன்றியும் இவ்வாறான வேட்பாளர் ஒருவரை நியமித்தால் கூட்டணி தேர்தலில் தோற்றாலோ வென்றாலோ நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை நீக்க முடியாது விட்டால் அவர் (பிரதமர்) தானாகவே சனாதிபதி வேட்பாளர் ஆகிவிடுவார். அது சந்திரிகாவின் தலைமைக்கு அச்சுறுத்தலாகலாம். இந்த உண்மைகளும் மறுப்பதற்கில்லை. கூட்டணியைப் பொறுத்த மட்டில் அதிலிருந்து ஒருவர் பிரதமராக வேட்பாளராகுமிடத்து, அவர் தானாகவே சனாதிபதி வேட்பாளராக மட்டுமன்றி கட்சியின் தலைவர் ஆகவும் வந்துவிடுவார். 2005 ஆம்ஆண்டு சனாதிபதித்தேர்தலுக்காக எவரும் போட்டியிட ஆளில்லாமல் போகும் அதேவேளை சுதந்திரக்கட்சித் தலைமைப்பீடத்துக்கும் ஒருவர் கிடைக்காமல் திண்டாடுவர். சந்திரிகா நேரத்துக்கு நேரம் இரண்டாவது அணி ஒன்றை தம்வசப்படுத்தினாலும் தனக்குப் பிறகு கட்சித்தலைமைப்பீடம் பற்றிச் சிந்திப்பது இல்லை. அது பற்றிய சிந்தனை ஒரு துளிகூட அவரிடம் இல்லை.

ஆகவே அவர் இப்போது ஒருவரை பிரதமராக வேட்புமனுத்தாக்கல் செய்ய அனுமதிப்பாராயின், அவரே கட்சியின் தலைவருமாவார். நிறைவேற்று அதிகார சனாதிபதி முறையை நீக்கி சனாதிபதித் தேர்தலை தடைசெய்து கட்சியின் தலைவியாக தொடர்ந்து இருப்பதற்கு சந்திரிகா நினைத்தால் மாற்று கட்சிஉறுப்பினர் ஒருவரை தலைவராக நியமிக்கும் அவசியம் எழாது. இவ்வேளையில் பிரதம வேட்பாளர் ஒருவரை நியமித்தால் மாற்றுக் கட்சியினரை உற்சாகப்படுத்துவதாக அமையும். ஆனால் அவ்வாறு செய்ய சந்திரிகா தயாராக இல்லை என்றே தெரிகிறது.

அவ்வாறு நியமிக்கப்பட்டால் அந்த வாய்ப்பைப் பெற அனுராவை விட வேறு ஒருவரும் சி.சு கட்சியில் இல்லை. காரணம் 1994 ஆம் ஆண்டு அவருக்குக் கிடைக்க வேண்டிய வாய்ப்பைகட்சி கிடைக்காமல் செய்தது. நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்தே சிறிமா அம்மையார் சனாதிபதியானால் அனுரா பிரதமராவார் என்றே கட்சிக்குள் பேசப்பட்டது. 1988 ஆம் ஆண்டு சனாதிபதித் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் ஒன்றுக்கு வருகை தந்த போது கட்சியினர் அவரை எதிர்கால பிரதமர் வருகிறார் என்றே கூச்சலிட்டனர். ஆயினும் அம்முறை அத்தேர்தலில் கட்சி தோல்வி யடைந்ததால் அனுராவுக்கு வாய்ப்பு நழுவியது. ஆனால் சந்திரிகா வந்தபின்பு அனுராவுக்கு பிரதமர் ஆகும் வாய்ப்பு மட்டுமன்றி கட்சியிலும் இடம் கிடைக்காமல் விட்டது. அந்த நட்டத்தை ஈடுசெய்ய அனுராவுக்கு இதுவே வாய்ப்பு. 1988,1989 ஆம் ஆண்டுகளில் ஐ.தே.கட்சியையும் ஜே.வி.பியையும் சனாதிபதித் தேர்தலில் தோல்வி காணச்செய்ய கட்சியைத் தோளில் சுமந்து நாட்டை சுற்றி வந்தவர் அனுரா பண்டாரநாயக்கவே. ஆறில் ஐந்து பெரும்பான்மை கொண்ட ஐ.தே.க அரசின் அன்றைய எதிர்க் கட்சியிலிருந்து குரல் கொடுத்த வரும் இவரே. அவ்வாறு அவர் கட்சியைக் கட்டிக்காக்காது விட்டிருப்பின் 17 வருடங்களுக்குப் பின் 1994ல் சுதந்திரக்கட்சித் தேர்தலில் வென்றிருக்க முடியாது. 17 வருட காலமாக ஜெயவர்த்தனா, பிரேமதாசா, லலித் ஆகியோருடன் போரிட்டே அவர் கட்சியைப் பாதுகாத்தார். 1994ல் வெறும் விஜயதுங்கவை வென்றே ஆட்சியைக் கைப்பற்றினார். அந்த வேளை மேற்கூறப்பட்ட அரசியல் மேதாவிகள் இருக்கவில்லை. அவ்வாறு நோக்கினால் அனுரா இல்லாமல் சுதந்திரக்கட்சி வெற்றி பெற்றிருக்காது. அவர் பண்டாரநாயக்க ரத்வத்த பரம்பரையில் ஒருவர். சந்திரிகாவின் பின் அவரே பண்டாரநாயக்க பரம்பரையின் வாரிசாவார். அந்த வகையில் அனுராவே பிரதம வேட்பாளருக்கான தகுதியைப் பெறுகிறார். அடுத்தது கூட்டணி வென்றால் பிரதமர் தகுதி அனுராவுக்கு வழங்காமல் இருக்க முடியாது. கூட்டணி அமைய உற்சாகத்தை அளித்ததும் அனுராவே. ஆகவே அவருக்கு பிரதமர் ஆகும் வாய்ப்பை அளிப்பதே அவருக்கு செலுத்தும் நன்றிக்கடனாகும்.

மறுபக்கத்தில் அக்கட்சியின் அடுத்த உறுப்பினரான மகிந்த ராஜபக்ச வுக்கும் பிரதமராகும் உரிமை இல்லாமல் இல்லை. முதலாவதாக அவர் எதிர் கட்சித் தலைவராக இருக்கிறார். எதிர் கட்சித்தலைவர் என்ற வகையில் அவர் பிரதமராவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். மற்றும் கட்சிக்குள்ளும் அனுராவை விட மூத்த உறுப்பினர் என்ற காரணமும் எதிர்க் கட்சித் தலைவர் என்ற பதவியிலும் இருக்கிறார். அவரும் அனுராவைப் போன்று கட்சிக்காக உழைத்தவர். 1988-89 ஆம் ஆண்டுகளில் தேர்தல் மோசடிகளின் போது அனுராவுக்கு பக்க பலமாக இருந்தார். பிரேமதாச வினால் கட்சி வீழ்ச்சியுற்ற போது பாதை யாத்திரை சென்று கட்சிக்கு ஆதரவு திரட்டியவர் மகிந்தவே. அனுராவுக்கும்- சந்திரிகா வுக்கும் இடையில் பிணக்குகள் தோன்றிய போதும் சமரசமுயற்சியில் ஈடுபட்டுகட்சி நலனுக்கு பாடுபட்டவர் மகிந்தராஜபக்சவே. அனுரா கட்சியை விட்டுப்பிரிந்து சென்றமை தகுதியின்மையாகக் கருதினாலும் மகிந்த அவ்வாறு பிரிந்து செல்லாமை அவருக்கு தகுதியை வழங்குகின்றது.



அனுரா



மஹிந்த ராஜபக்ச



மங்கள சமரவீர



கதிர்காமர்

அது மட்டுமன்றி அக்காலப்பகுதியில் ஐக்கிய சோசலிச முன்னணி, இடதுசாரிகள், லலித்-காமினி திஸாநாயக்க கூட்டுக்கட்சியான சனநாயக ஐக்கிய தேசிய முன்னணி போன்ற கட்சிகளினால் சுதந்திரக்கட்சிக்கு ஏற்படவிருந்த வீழ்ச்சியிலும் அவர் தலையிட்டு கட்சியைக் காப்பாற்றினார். அதேபோல தற்போதும் ஜே.வி.பி கட்சியில் இருந்தும் இக்கட்சிக்கு அச்சுறுத்தல் ஏற்படுமாயின் அதனை தடுக்க மகிந்தவுக்கு பிரதமர் பதவி வழங்கப்படுவது அவசியமாகும். அவர் ஒரு பண்டாரநாயக்க பரம்பரையில்லையாயினும் அவர்களுக்குப் பின்னால் நின்றவர். அதுபோல எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்காவும் ராஜபக்ச பரம்பரையை மறக்கக்கூடாது என்று சொல்லியிருந்தார்.

இந்த இருவருக்குமிடையில் இருக்கும் பிணக்கை தீர்ப்பவராகவும் சந்திரிகாவின் நம்பிக்கைக்கு மிகுந்த உத்தரவாதம் உள்ளவ்ராக இருக்கும் கதிர்காமரையும் ஒதுக்கி விடமுடியாது. அவர் சிறுபான்மை இனத்தவராக இருக்கலாம். ஆனால் சிறுபான்மையினரை ஒடுக்கும் வழிகளில் அரசுக்கும் ஜே.வி.பிக்கும் துணை நிற்பவர். அதுபோல் மைத்திரி பால சிறிசேன அவர் கட்சியின் செயலர் மட்டுமன்றி சுதந்திரக்கட்சியின் கோட்டையான வடமத்திய மாகாணத்தின் பிரதிநிதி பண்டாரநாயக்கர்களின் இரண்டாவது தலைவர்கள் உருவாகும் வடமத்திய மாகாணத்தவர். அப்படிப்பட்ட ஒருவர் சி.பி.த. சில்வா.

எனவே சந்திரிகா சிறிசேனவையும் ஆதரிக்க வேண்டிய இக்கட்டான நிலையில் உள்ளார்.

இவர்களைப் போன்றே ரத்வத்த பரம்பரையின் அதாவது சிறிமாவின் பரம்பரையில் வந்தவரான அனுருத்த ரத்வத்தவும் அவருக்குப் பிரதமராகும் வாய்ப்பு இருப்பினும் அவர் இன்று குற்றவாளியாகக் காணப்படுகின்றார்.

அடுத்ததாக தற்போதைய கூட்டணிக்கு வித்திட்டவர் என்ற வகையில் மங்கள சமரவீரவையும் மறக்க முடியாது. இழுபறிப்பட்டு வந்த கூட்டணி உறுதி பெற இவரின் பங்களிப்பு முதன்மை பெறுகிறது. ஐ.தே.கட்சியை வீழ்த்த கூட்டணி அமைத்த வழியில் இவரையும் புறந்தள்ளி விடமுடியாது. இவர்கள் அனைவரையும் விட

**உப்புல் ஜோசப் பர்னாண்டோ**
**(லங்காதீப)**
***தமிழில் – வடிவேல்***

சந்திரிகா தற்போது விசுவாசம் காட்டும் முக்கிய நபர் சுசில் பிறேம ஜயந்த் அரசியல் பழிவாங்கல்களை திறம்பட செய்பவர் இவரே. இவர் தற்போது கூட்டணி செயலர்களில் ஒருவராக இருக்கின்றார்.

இவர்களில் நிலை இவ்வாறிருக்க பாராளுமன்றைக் கலைத்த பின்னர் சந்திரிகா ஒரு கூட்டத்தில் தெரிவித்திருப்பதாவது நிறைவேற்று அதிகார சனாதிபதியை நீக்கி விட்டு பாராளுமன்ற உறுப்பினராக தாம் வரவேண்டும் என்றும் அதுவெட்கப்படவேண்டிய ஒன்றல்ல என்று கூறியுள்ளார். அத்துடன் அவரது சனாதிபதி பதவிக்காலமும் ஒன்று அல்லது இரண்டு வருடங்களில் முடிவுக்கு வருகின்றதையும் சுட்டிக்காட்டியுள்ளார். அதன்படி அவர் ஓய்வு பெறவேண்டும். அல்லது தேர்தல் ஒன்றில் போட்டியிட்டு பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு பிரதமராகலாம். அல்லது எதிர்க்கட்சித் தலைவியாகலாம்.

தற்போது அவர் அவசரமாகத் தேர்தல் ஒன்றை அறிவித்திருப்பது தனது அரசியல் வாழ்வை நீடிக்கவே. அதற்கு எதிரான நடவடிக்கைகள் நடக்குமாயின் அவரது அரசியல் வாழ்வு குறுகிவிடும். அதற்கு சந்திரிகா இடமளிப்பாரா என்பது புதுமையே.

★★★★★

# 79 போலி முகவர் நிலையங்கள் கடந்த இரு மாதங்களில் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினால் இதுவரை 79 போலி முகவர் நிலையங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

இவற்றில் 40 நிலையங்கள் தலைநகர் கொழும்பைச் சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் மத்திய கிழக்கு நாடுகளிலும் ஏனையநாடுகளிலும் தொழில் வாய்ப்புப் பெற முயற்சிப்போர் அவதானமாக இருக்குமாறு சிறிலங்கா வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் எச்சரிக்கை செய்துள்ளது.

இதேவேளை கடந்த வருடமும் 25 போலி முகவர் நிலையங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பாதைப் படகுச் சேவை ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வீதி அபிவிருத்தி அதிகார சபை நேற்று முன்தினம் முதல் ஊர்காவற்றுறைக்கும் காரைநகருக்கும் இடையில் பாதைப்படகு சேவையை ஆரம்பித்துள்ளது.

முன்னர் இச்சேவை யுத்த நிலைமைகளில் கடற்படையினரால் நடத்தப்பட்டு வந்தது. சுமார் ஒரு வருடத்துக்கு முன் இதனை வீதி அபிவிருத்திச் சபை பொறுப்பேற்றதாயினும் அது பழுதடைந்து விட்டது. பின்னர் ஊர்காவற்றுறை உதவி அரச அதிபரின் வேண்டுகோளின் படி பிரதேச சபையினர் இச்சேவையை நடத்தி வந்தனர்.

# ஸ்ரீலங்கா அரசு
# வடக்கு கிழக்கு மாகாண சபை
# வடக்கு கிழக்கு அவசர மீளமைப்புத் திட்டம்

# நம்பிக்கை இல-2880 சி.ஈ.தேசிய போட்டி மட்ட விலை கோரல் (பொறியியல் வேலைகள்)

விலை கோரல் அழைப்பு (உவிநி-ஐஎவ்பி)

ஐ.எவ்.பி.இல கிளி/நீர்ப்/சீஎல்ஜீ /டபிள்யூஎஸ்எஸ்/01
கிளி/நீர்ப்/சீஎல்ஜீ/டபிள்யூஎஸ்எஸ்/02
கிளி/நீர்ப்/சீஎல்ஜீ/டபிள்யூஎஸ்எஸ்/03

திகதி 23.02.2004

1. சிறிலங்கா அரசு, உலகளாவிய அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து வடக்கு கிழக்கு மாகாண அவசர மீளமைப்புத் திட்டத்தின் கீழ் பெற்ற நம்பிக்கை நிதியத்தின் ஒரு பகுதியை கீழ்க் குறிப்பிடப்படும் அட்டவணையில் காட்டப்பட்டவாறு உரித்தான கொடுப்பனவுகளுக்கு வழங்கவுள்ளது. விலை கோரல் உரித்தான சகல நாடுகளுக்கும் பொருந்துவதோடு உலக வங்கி வழிகாட்டலில் காட்டப்பட்டுள்ளது. உலக அபிவிருத்தி நிறுவனத்தின் கீழ் கடன் பெறல்.

2. மாவட்ட செயலாளர், கிளிநொச்சி, சிறிலங்கா உரிய கேள்வி தாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகளை பின்வரும் வேலைகளுக்காக கோருகின்றார். கேள்வி வேலை விபரம் கீழே தரப்பட்டுள்ளது. கேள்வி தாரர்கள் ஏதாவது ஒரு வேலையையோ அல்லது எல்லா வேலைகளையுமே கேள்வி கோரலாம்.

| ஐ.எவ்.பி. இல | வேலை விபரம் | கேள்விப்பிணைப் பணம் ரூபா | கேள்விப்பத்திரக் கட்டணம் ரூபா | செய்து முடிக்க வேண்டிய கால எல்லை |
|---|---|---|---|---|
| கேஎன்/நீர்ப்/சீஎல்ஜீ/டபிள்யூஎஸ்எஸ்/01 | பளை நகரசிறிய நீர் விநி யோகத் திட்ட புனரமைப்பு | 66,000.00 | 800.00 | 04 மாதங்கள் |
| கேஎன்/நீர்ப்/சீஎல்ஜீ/டபிள்யூஎஸ்எஸ்/02 | வட்டக்கச்சி சிறிய நீர் விநி யோகத் திட்ட புனரமைப்பு | 43,000.00 | 800.00 | 03 மாதங்கள் |
| கேஎன்/நீர்ப்/சீஎல்ஜீ/டபிள்யூஎஸ்எஸ்/03 | கரைச்சி சிறிய நீர் விநி யோகத்திட்ட புனரமைப்பு | 147,000.00 | 800.00 | 05 மாதங்கள் |

3. உரிய கேள்விப்பத்திர ஆவணங்களை (இரு பிரதிகளில்) ஒவ்வொரு கேள்விப் பத்திரங்கள் சம்பந்தமாகவும், கிளிநொச்சி பிராந்திய உதவி ஆணையாளரிடம் 25.03.2004ஆம் திகதி15.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். இதற்காக திருப்பி அறவிடமுடியாத தொகையான அட்டவணையில் குறிப்பிடப்பட்ட கேள்விப் பத்திரக் கட்டணத்தைக் காசாகவோ அல்லது தபாலகத்திலிருந்து பெறப்பட்ட காசுக்கட்டளையாகவோ செலுத்திப்பெற்றுக்கொள்ளலாம். காசுக்கட்டளைகள் யாவும் ''மாவட்டச் செயலாளர், கிளிநொச்சி'' என்றே பெறப்படல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள், கேள்விப்பத்திரங்களை கட்டணமின்றி விரும்பின் பார்வையிடலாம். இது போன்ற மேலதிக தகவல்களை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கிளிநொச்சி.

தொலைபேசி 021-2285781 இடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

05. கேள்விகள் யாவும் கேள்விகள் திறக்கப்பட்டு90 நாட்களுக்கு செல்லுபடியாகும். கேள்விகள் யாவும் அட்டவணையில் பந்தி 2இல் குறிப்பிட்டவாறு மாவட்டச்செயலாளர், கிளிநொச்சி என்ற பெயரில் வழங்கப்பட்ட கேள்விப் பிணைப்பணத்துடன் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

ஒப்படைக்கப்படும் முகவரி:-

தலைவர்,
கேள்விச்சபை,
மாவட்டச்செயலாளர் அலுவலகம்,
கச்சேரி,
கிளிநொச்சி.

கேள்விப் பத்திரங்கள் யாவும் 26.03.2004 ஆம் திகதி மாலை 15.00 மணிக்கு முன்னராகக் கிடைக்க வேண்டும். கேள்விகள் யாவும் கேள்விதாரர்கள் முன்னிலையில் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் கேள்விகள் கோரப்பட்டு முடிவடைந்தவுடன் அன்றைய தினமே திறக்கப்படும். கேள்விகள் பெறப்படும் தினங்களில் குறிப்பிட்டபடியல்லாது ஏதாவது காரணங்களுக்காக மூடப்பட்டிருந்தால் கேள்விகள் யாவும் அதற்கு அடுத்துவரும் வேலை நாளில் பெறப்பட்டு அது திறக்கப்படும் கேள்விகள் பெறப்படும், திறக்கப்படும் இடத்திலும் நேரத்திலும் மாற்றமிராது.

06. கேள்விதாரர்கள் யாவரும் கேள்விதாரர்களுக்கு உரித்தான கேள்வி தரவுகள் என்பதில் தகைமை பெறக்கூடிய தனிப்பட்ட ஒப்பந்தம் என்ற ஒப்பந்தகாரருக்கான அறிவுறுத்தல்களின் 4ஆம் பிரிவில் கூறப்பட்ட குறைந்தளவு தகைமையையாவது கொண்டிருக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

ஐ.எவ்.பி.(உவிநி)யின் கீழ் ஒன்றிற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களை பெறுவாராயின், அக்கேள்விதாரர் தனது அனுபவங்களையும், வளங்களையும் இந்த திரட்டப்பட்ட திட்டங்களுக்கு சேர்த்து தனது தனிப்பட்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவாரென்பதை சான்றுடன் எடுத்துக்காட்டுதல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களை கேள்விப் பத்திரங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

தி.இராசநாயகம்,
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-8799)



## சிந்தனைக்கு

மனிதர்களின் இருப்பைவிட மனிதர்களின் செயற்பாடே போராட்ட வரலாற்றின் சக்கரத்தைச் சுழற்றுகின்றது.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 23-02-2004

# அதிகரிக்கும் வன்முறை

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2ஆம் திகதி நடைபெறவிருக்கின்ற சிறிலங்காவின் 13-வது பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தலுக்கு நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும்நாள் நாளையுடன் முடிவுறுகிறது. தேர்தல் அறிவிக்கப்பட்டவுடனேயே கட்சிகளுக்கிடையேயான மோதல்கள் ஆரம்பமாகிவிட்டன. ஆனால், "தேர்தல் வன்முறை" என நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்யும் ஆரம்ப நாளான 17-ஆம் திகதிக்குப்பின் நடைபெற்ற அரசியல் வன்முறைகளே கொள்ளப்படுகின்றன. இதனடிப்படையில் பார்த்தாலும் வன்முறைகள் நாளுக்குநாள் அதிகரித்து வருவதாகவே சம்பந்தப்பட்ட அமைப்புகள் கூறுகின்றன. தேர்தலின் போது, வன்முறைகள், முறைகேடுகள் இடம்பெறலாம் என்ற எதிர்வுகூறல்களின் அடிப்படையில் 140 நாடுகளின் கண்காணிப்பாளர்கள் இத்தேர்தலைக் கண்காணிப்பதாகத் தெரியவருகிறது.

இதனை விடவும் பல உள்ளூர் அரசசார்பற்ற அமைப்புகளும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளன. அதற்கான ஆரம்ப வேலைகள் பூர்த்தியாகியுள்ளன.

ஆனால், இவையெல்லாம் வன்முறைகளையும் தவிர்க்க உதவுமா? என்றால் இல்லை என்றே கூறவேண்டும். 1977 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சிறிலங்காவில் நடைபெற்ற தேர்தல்களின் அடிப்படையில் வைத்துப் பார்க்கும் போதும்வேறும் சில காரணங்களை வைத்துப் பார்க்கும் போதும் இது புலனாகும். ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சிக் காலத்தில் குறிப்பாக பிரேமதாச சனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட வேளையிலும் அதற்குப் பிந்திய காலப்பகுதியிலும் வன்முறைகள் அதிகரித்து வந்தது.

அவ்வேளை, ஜே.வி.பி.தேர்தலைப் புறக்கணிக்கக் கோரியதும் வாக்குச் சாவடிகள் மீது தாக்குதல் நடத்தியதும் தேர்தல் வன்முறைகளை இலகுவாகச் செய்து முடிக்கப் பிரேமதாசவிற்கு இலகுவாக இருந்தது.

பின்னர் மேல்மாகாண சபைத் தேர்தலில் சந்திரிகா குமாரதுங்க தேர்தலில் போட்டியிட்டது முதல் பின்னர் 1994 இல் நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தல் வரை, ஐக்கிய தேசியக் கட்சியினர் மேற்கொள்ளும் தேர்தல் வன்முறைகளை முறியடிக்க சிறிலங்கா சுதந்திரக்கட்சி "பாதுகாப்புக்குழு" ஒன்றை அமைத்தது. அதற்கு அனுருத்தரத்வத்தவே தலைமை தாங்கினார். பின்னர் அவரே தேர்தல் வன்முறைகளில் ஈடுபட்ட தாகக் குற்றம் சாட்டப்பட்டார்.

பின்னர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக் காலத்தில் அவர் ஆறு "வெற்றிகரமான" தேர்தல்களை நடத்தினார். அதாவது அவர் நடத்திய அ[illegible] ஆறு தேர்தல்களிலும் பொதுசன ஐக்கிய முன்னணி வெற்[illegible]டியது. அது குறித்து அடிக்கடி சனாதிபதி சந்திரிகா குமார[illegible]ங்க பெருமைப்பட்டுக்கொண்டார். ஆனால், இத்தேர்தல் காலங்களை எடுத்துக்கொண்டால் இவற்றிலெல்லாம் வன்முறைகள் அதிகரித்த போக்கிலேயே காணப்பட்டன.

இவ்வன்முறைகளில் கட்சி ஆதரவாளர்கள் மட்டுமல்ல, பணம் கொடுத்துப் பாதாள உலகக் குழுக்களையும் இக்கட்சிகள் மோதவிட்டன. இவ்வன்முறையின் உச்சமாக வடமேல் மாகாண சபைத் தேர்தல்களம் அமைந்திருந்தது. இத்தேர்தல் களத்தில் இடம்பெற்ற வன்முறைகளும் முறைகேடுகளும் சர்வதேச ரீதியில் ஏற்படுத்திய அவப் பேரே சிறிலங்காவில் புத்திஜீவிகள் மத்தியிலும் அரசசார்பற்ற சில அமைப்புக்கள் மத்தியிலும் தேர்தல் கண்காணிப்புக் குழுக்களை அமைக்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியது.

ஆனால், இக்கண்காணிப்புக் குழுக்களால் இந்த வன்முறைகளையும் முறைகேடுகளையும் ஓரளவு கட்டுப்படுத்த முடிந்ததே தவிர இல்லாதொழித்துவிட முடியவில்லை.

காரணம் இத் தேர்தல்கள் வன்முறை முறைகேடுகளின்றி நடைபெற்றால் தாம் தோற்றுவிடுவோமோ என அரசியல் தலைவர்களிடம் உள்ள அச்சமாகும்.

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்துப் பொலிஸ் அதிகாரம், ஊடகத்துறை, தேர்தல் ஆணையகம் என்பவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தைக் கையில் வைத்துக்கொண்டே தேர்தலில் ஈடுபட வேண்டுமென்ற அடிப்படையை வைத்திருக்கிறார். ஆனால் இவற்றுடன் நீதி, நிர்வாகம் இவற்றுக்குச் சுயாதீன ஆணைக்குழுக்கள் அமைக்கப்பட வேண்டும் என்பது 1994 தேர்தலின் போது அவரது விஞ்ஞாபனத்திலே குறிப்பிடப்பட்டிருந்தது.

ஆனால், 2001 ஆம் ஆண்டின் இறுதியில் நான்கு சுயாதீன ஆணைக்குழுக்கள் ஜே.வி.பி.யின் வற்புறுத்தலில் அமைக்கப்பட்ட சட்டமூலம் கொண்டுவரப்பட்ட போதும் இன்றுவரை அவை செயற்படாமைக்கு சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகளே காரணமாயுள்ளன.

எனவே அதிகாரத்திலுள்ளோர் முறைகேடுகளும் வன்முறைகளும் இல்லாதொழிக்கப்படுவதை விரும்பாத நிலையில் இவை தொடரும் என்பதில் ஐயம் எதுவுமில்லை.

# கட்டுநாயக்கா வரும் வெளிநாட்டினருக்கு உள்ளூர் நிலைமைகளையறியத் தடை!

(கொழும்பு)

சிறிலங்கா வந்து போகும் வெளிநாட்டவர்கள் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் கொந்தளிப்பு நிலவரங்களை தவறான முறையில் புரிந்து கொள்ளக்கூடும் என்பதனால் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் கடந்த சிலதினங்களாக உள்ளூர் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. வெளி நாட்டுதொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மட்டுமே ஒளிபரப்பப்பட்டு வருகின்றன.

ஐக்கியமக்கள் சுதந்திர முன்னணியின் புதிய அரசியல் நடவடிக்கைகள் தொடர்பாக தொலைக் காட்சியில் அடிக்கடி பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் இதை மறைப்பதற்காகவே விமான நிலைய அதிகாரியொருவர் இவ்வாறானதோர் தன்னிச்சையான நடவடிக்கை யொன்றை மேற்கொண்டிருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# நாட்டில் அராஜக ஆட்சியை ஒழிக்கவே சனாதிபதி பாராளுமன்றைக் கலைத்தார்

## -முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கருத்து

(கொழும்பு)

நாடு அராஜக முறைக்கு தள்ளப்பட்டதாலேயே சனாதிபதி பாராளுமன்றைக் கலைத்தார் என முன்னாள் இரத்தினபுரி மாவட்ட பொ.ஐ.மு. முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜோன செனவிரத்ன கூறியுள்ளார்.

லக்பிம வாரப்பத்திரிகைக்கு அவர் வழங்கிய பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது,

பாராளுமன்றைக் கலைத்து விடாமல் சுமுகமான இணக்கப்பாட்டுடன் ஆட்சி நடத்தவே சனாதிபதி விரும்பினார் ஆயினும் சிலர் பாராளுமன்றைக் கலைக்கவே மூன்று அமைச்சுக்களையும் சுவீகரித்ததாக குற்றம் சுமததுகின்றனர். இதில் எவ்வித உண்மையுமில்லை என அவர் கூறியுள்ளார். எமக்கு முன்னைய தேர்தல்களில் கிடைத்த வாக்குகளை விட அதிகமான வாக்குகள் இம்முறை கிடைக்கும் எனவும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு சம்பள உயர்வு போன்ற பிரச்சினைகளால் ஐ.தே.கட்சி வீழ்ச்சியுறும் எனவும் தெரிவித்துள்ளார்.

# ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அனுருத்தரத்வத்த முற்றாக புறக்கணிப்பு

(கொழும்பு)

சிறிலங்காவின் முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முக்கிய பிரமுகருமான அனுருத்தரத்வத்தைக்கு சிறிலங்கா ஜே.வி.பி.இணைந்த ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கூட்டத்தில் உரியஇடம் வழங்கப்படவில்லையென குற்றம் சாட்டப்பட்டுள்ளது.இதேவேளை அனுருத்தரத்வத்தையின் பெயர் வேட்பாளர் பட்டியலில் இடம் பெறாததுடன் தேசியப் பட்டியலிலும் இடம் பெறவில்லையென தகவல்கள் தெரிவிக்கின்றன.

உடதலவின்னவில் 10 முஸ்லிம் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவத்தில் முதலாவது சந்தேகநபராக ரத்வத்தையின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளமையினாலேயே இவர் தேர்தல் பட்டியலில் இடம் பெறாமைக்குக் காரணம் எனவும் தகவல் தெரிவிக்கின்றன.

# கவச உடைகளின் பற்றாக்குறையே இராணுவத்திற்கு பெரும் பிரச்சினை!

## -இந்தியாவுடனான ஒப்பந்தத்திலும் குழறுபடி-

சிறிலங்கா இராணுவத்தினர் எதிர்நோக்கியுள்ள குண்டுதுளைக்காத கவச [illegible]ங்கிகளின்பற்றாக்குறை பெரும பிரச்சினையாகவுள்ளதாக சிறிலங்கா படைத்தரப்பை மேற்கோள் காட்டி 'சிலுமின' வாரஇதழ் தெரிவிக்கிறது.

இந்த கவசஅங்கிகளை இந்தி[illegible]யாவிலிருந்து அவசரமாக பெற்றுத்தர திட்டமிட்டிருப்பினும் இதுவரை எந் நடவடிக்கைகளும் எடுக்கப்படாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கவசஅங்கிகள் 32ஆயிரத்துக்கும் தலைக்கவசம் 35 ஆயிரத்துக்கும் இந்தியாவுடன் அண்மையில் ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டது. எனினும் ஒப்பந்தத்தில் உள்ள தவறுகள் காரணமாக மேற்படி இராணுவ உபகரணங்கள் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

# போக்குவரத்து பொலிசார் அசமந்தம் வவுனியாவில் விபத்துக்கள் அதிகரிப்பு!

(வவுனியா செய்தியாளர்)

வவுனியாவில் அண்மைக் காலமாக வாகன விபத்துக்கள் அதிகரித்து வருகின்றன.

பூந்தோட்டம் வீதியில் கடந்த வியாழக்கிழமை காலை சொகுசு வான் ஒன்றும் முச்சக்கரவண்டி ஒன்றும் எதிர்எதிரே மோதியதில் முச்சக்கர வண்டி சாரதி படுகாயம் அடைந்த நிலையில் வவுனியா வைத்திய சாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை கடந்த வெள்ளிக்கிழமை மாலை புகையிரத நிலைய வீதியில் முச்சக்கர வண்டி ஒன்றும் உந்துருளியும் மோதுண்டதில் உந்துருளியும் முச்சக்கர வண்டியும் பலத்த சேதமடைந்துள்ளன.

வவுனியாவில் விபத்துக்கள் அதிகரிப்பதற்கு வேகக்கட்டுப்பாட்டு நடைமுறையை சிறிலங்கா போக்குவரத்துப் பொலிசார் நடைமுறைப் படுத தாமையே காரணம் எனக் கூறப்படுகின்றது. (10)

# பலமுள்ள அரசை நிறுவுவோம்

## -பிரதி அமைச்சர் பந்துல


இந்நாட்டின் வரலாற்றில் மிகப் பின்தங்கிய நிலையிலிருந்த பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பவும் விவசாய, கைத்தொழில் நடவடிக்கைகள் வளர்ச்சியுறவும் உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரிக்கவும் விமான, கப்பல் போக்குவரத்து சுமுகமாக நடைபெறவும் எமது இரண்டு வருடகால ஆட்சிவழிவகுத்தது. வீழ்ச்சியடைந்த ரூபாவின்மதிப்பு உயர்ந்தது. இந்நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. எனினும் இம்முறை தேர்தலில் நாம் வெற்றிபெற்று முன்னைய அரசாங்கத்தைவிட பலமுள்ள அரசை நிறுவுவோம் என பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். பத்திரிகை ஒன்றுககு அவர் வழங்கிய செவ்வியில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது. நாம் சனாதிபதியுடன் சுமுகமான முறையினை அணுகினோம். எனினும் சனாதிபதி அதனை புரிந்து கொள்ளாமல் இருக்கின்றார் என தெரிவித்துள்ளார்.

# மைதானம் சீரமைப்பு

(முள்ளியவளை)

பெரிய புளியங்குளம் அ.த.க.பாடசாலையின் விளையாட்டு மைதானம் அப்பகுதி மக்களினால் உழவு இயந்திர உதவியுடன் சிரமதானப்பணி மூலம் கடந்த வாரம் துப்புரவு செய்யப்பட்டு சீர்செய்யப்பட்டுள்ளது.

1996 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவம் மேற்கொண்ட ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கையின் போது மேற்படி பாடசாலையும் இராணு வத்தால் ஆக்கிரமிக்கப்பட்டு முகாம் அமைக்கப்பட் டிருந்த போது மேற்படி பாடசாலை மைதானத்தில் பாரிய பதுங்குகுழிகள் இராணுவ காப்பரண்கள் அமைக்கப்பட்டிருந்தது. மீண்டும் பாடசாலை ஆரம் பிக்கப்பட்டபின் சிரமதானம் மூலம் உழவு இயந்திரங்க ளினால் பதுங்குகுழிகள் மூடப்பட்டு காப்பரண்கள் அகற்றப்பட்டு மைதானம் சீர்செய்யப்பட்டு எதிர்வரும் 03.03.2004 இல் நடைபெறவுள்ள மேற்படி பாடசாலையின் இல்ல விளையாட்டுப்போட்டிக்காக தயாராபடுத்தப்பட்டுள்ளதாக மேற்படி பாடசாலையின் அதிபர் திருமதி வே.நித்தியகலா தெரிவித்தார். (ஆ)




# சிறிலங்கா வெற்றிபெற்றது

நேற்று தம்புளை-டிங்கிரி மைதானத்தில் நடைபெற்ற அவுஸ்திரேலிய-சிறிலங்கா அணிகளுக்கிடையிலான 2வது ஒரு நாள் போட்டியில் சிறிலங்கா அணி 1 ஓட்டத்தால் வெற்றிபெற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா 49.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையுமிழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது.

246 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கோடு ஆடிய அவுஸ்திரேலிய அணி சிறிலங்காவின் சிறந்த களத்தடுப்பினால் 50 ஓவர் முடிவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 244 ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்துள்ளது. 5 போட்டிகளைக் கொண்ட தொடரில் 1-1 என்ற நிலையில் அணிகள் உள்ளன. 3வது போட்டி நாளை மறுதினம் கொழும்பில் நடைபெறும்.

# பாகிஸ்தான் வரவேற்பு

பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும் இந்திய அணியினர் கராச்சியிலும், பெஷாவரிலும் ஒரு நாள் போட்டிகளில் விளையாட முடிவு செய்துள்ளதை பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத்தலைவர் வரவேற்றுள்ளார்.

எதிர்காலத்தில் இம்மைதானங்களில் டெஸ்ட் போட்டிகளை நடத்த இவ் ஒருநாள் போட்டிகள் வழி வகுக்கும் எனவும் தனியார் தொலைக்காட்சி சேவைக்கு அளித்த பேட்டியில் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுடனான போட்டிகளில் விளையாட 22 பேர் கொண்ட பாகிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

# இருவருடங்கள் கடந்துவிட்டபோதும் இயல்பு வாழ்க்கை திரும்பவில்லை

## யாழ். மனிதநேய அமைப்புக்கள் நோர்வேக்கு மகஜர்

"அரசு-புலிகளுக்கிடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இருவருடங்கள் பூர்த்தியாகின்ற போதிலும், குடாநாட்டு மக்களது இயல்பு வாழ்க்கை முழுமையாக திரும்பியிருக்கவில்லை" என யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் குற்றஞ்சாட்டியுள்ளது.

புரிந்துணர்வு ஒப்பந்தம் இரண்டாம் ஆண்டை எட்டியிருக்கின்ற நிலையில் குடாநாட்டு மக்களின் வாழ்க்கை நிலையைத் தெளிவுபடுத்தும் வகையிலான அறிக்கையொன்றை ஒன்றியம் நேற்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் ஊடாக நோர்வே அரசிற்கு சமர்ப்பித்துள்ளது.

மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்தின் தலைவர் சு.பரமநாதன் தலைமையிலான குழுவினர் நேரடியாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலகத்திற்கு விஜயம் செய்து இவ்வறிக்கையை சமர்ப்பித்திருந்தனர். பரமநாதன் கையளிக்க போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்.அலுவலக அதிகாரி உல்வ் அதனைப் பெற்றுக் கொண்டார்.

அவ்வறிக்கையில் "புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இருவருடங்கள் பூர்த்தியாகின்ற போதிலும் குடாநாட்டில் இராணுவ கெடுபிடிகள் குறையவில்லையெனவும்,

விடுதலைப்புலிகள் தரப்பில் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மதித்து செயற்படுகின்ற போதிலும் படைத்தரப்பு அவ்வாறான மனப்பாங்கைக் கொண்டிருக்கவில்லையெனவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

அத்துடன் உயர் பாதுகாப்பு வலயங் களால் 87,722பேர் அகதி வாழ்க் கையை குடாநாட்டினுள்ளேயே தொடர்ந்து வாழ்ந்து வருவதாகவும்,

அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான நடவடிக்கைகளில் தொடர்ந்தும் நம்பிக்கையூட்டும் வகையில் ஆர்வமாகச் செயற்பட்டுவருவதாகவும் அவர்கள் ஆறு சுற்றுப் பேச்சில் அரசுடன் அடிப்படை விடயங்கள் தொடர்பாக பேச்சுக்களை நடாத்தியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் தென்னிலங்கையில் ஏற்பட்ட அரசியல் இழுபறிகளால் சமாதான நடவடிக்கைகள் பாதிககப்பட்டிருப்பதாகவும் ஒன்றியம் தனது அறிக்கையில் விளக்கியுள்ளது.

இதனிடையே மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகளிடமிருந்து அறிக்கையைப் பெற்றுக்கொண்ட போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதிநிதி உல்வ் பின்னர் தமது அலுவலகத்தில் வைத்து பிரதிநிதிகளுடன் பேச்சுக்களை நடாத்தினார்.

யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத் தலைவர் சு.பரமநாதன், யாழ்மாவட்ட அரசசார்பற்ற அமைப்புக்களின் இணையத்தைச் சேர்ந்த எஸ்.ஸ்ரீசக்திவேல் சமாதானத்திற்கும் நல்லெண்ணத்திற்குமான மக்கள் அமைப்பைச் சேர்ந்த வணபிதா பி.ஜே. பேர்ணாட் கியூடெக் தொண்டமைப்பினைச் சேர்ந்த வணபிதா ஏ.ஜெயககுமார் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (27,33)

# போராளிக்கவிஞர் அம்புலியின் கவிதை நூல் நேற்றுவெளியீடு

(அலுவலக செய்தியாளர்)

போராளிக் கவிஞர் அம்புலியின் "மீண்டும் துளிர்க்கும் வசந்தம்" கவிதைநூல் மாலதி படையணி சிறப்புத்தளபதி கேணல் விதுஷா அவர்களால் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் நேற்று மாலை நான்கு மணிக்கு மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி தலைமையில் ஆரம்பமான இந்நிகழ் வில் பொதுச்சுடரை மாவீரர் மேஜர் தாரணியின் தாயார் ஏற்றிவைத்தார். தமிழீழத் தேசியக் கொடியை குட்டிசிறி மகளிர் படையணித் தளபதி, பவநிதி ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து வரவேற்புரையினை போராளி தூயவள் நிகழ்த்தினார். நூல்வெயியீட்டுரையினை தமிழீழ மகளிர் வெளியீட்டுப்பிரிவுப் பொறுப்பாளர் மருதம் நிகழ்த்தினார். அடுத்து மாலதி படையணி சிறப்புத்தளபதி கேணல் விதுஷா அவர்கள் இரண்டுமாவீரர்களின் தாயார் முத்துலட்சுமிக்கு முதலாவது பிரதியை வழங்கி நூலை வெளியிட்டுவைத்தார். தொடர்ந்து நூலின் ஏனைய பிரதிகளை செஞ்சோலைப் பொறுப்பாளர் ஜெனனி வழங்கினார்.

நிகழ்வில் சிறப்புரையினை தமிழீழ மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழினி ஆற்றினார். நூல் மதிப்பீட்டுரைகளை விடுதலைப் புலிகளின் முக்கியஉறுப்பினர் க.வே.பாலகுமாரன், மல்லாவி மத்திய கல்லூரி அதிபர் கோகுலவாணி, வெளிச்சம் சஞ்சிகை ஆசிரியர் கருணாகரன் ஆகியோர் வழங்கினர். பதிலுரையை நூலாசிரியர் அம்புலி நிகழ்த்தினார். போராளி கார்விழியின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவுபெற்றன. (லோ)

# கிளிநொச்சி மத்திய கல்லூரியின் பவளவிழாவிற்கு ஏற்பாடு

(அலுவலகசெய்தியாளர்)

கிளிநொச்சி மத்திய கல்லூரியின் 75வது ஆண்டு பவளவிழா கொண்டாடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பெற்றுள்ளது.

கல்லூரி அதிபர் வீ.இராஜகுலசிங்கம் தலைமையில் எதிர்வரும் 25ஆம் திகதி காலை 9.00மணிக்கு மத்திய கல்லூரி மண்டபத்தில் மேற்படி விழா இடம்பெறவுள்ளது.

முதன்மை விருந்தினராக கிளி. அரச அதிபரும் சிறப்பு விருந்தினர்களாக கிளி.வலயக் கல்விப் பணிப்பாளர், தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் கிளி.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர், கிளி.மாவட்ட மாகாண சுகாதார சேவை பிரதிப்பணிப்பாளர் முன்னாள் அதிபர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (சோ)

# அரசியல் குற்றவியல் பிரேரணை சனாதிபதிக்கெதிராக கொண்டு வருவேன்

## -முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கா

(கொழும்பு)

நாம் தேர்தலில் வெற்றி பெற்றால் சனாதிபதிக்கெதிராக அரசியல் குற்றச்சாட்டுப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவோமென முன்னாள் அமைச்சர்களான எஸ்.பி.திசாநாயக்கா எம் லொக்குபண்டாரவும் கூறியுள்ளார்.

கொழும்பு மாநாகரசபை வளவில் நேற்று நடந்த நிகழ்வில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

### இன்று...

தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் வே.பாலகுமரன் ஆகியோர் நிகழ்த்தினர் வே.பாலகுமாரன் அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,

இனிவரப்போகிற காலம் நிச்சயமற்றவை திரும்பத்திரும்ப தேர்தல் வரலாம் இலங்கையில் இன்று தங்கள் சிங்கள கிறிஸ்தவர் களுக்கே சிங்கள தேசத்தில் பாதுகாப்பு கேள்விக் குறியாக அமைந்துள்ளது. இதேவேளை அங்கு சிங்கள சுதந்திரக்கட்சியினர் முஸ்லிம் மக்களை அணைத்துக் கொண்டுள்ளனர் என்றால் இந்த தமிழ் மக்களை நசுக்குவதற்கு முஸ்லிம் மக்களை பகடக்காய்களாக சிங்கள சுதந்திரக்கட்சி அரசுபாவித்து வருகின்றது. இதை யாவரும் அறிந்து கொள்ளவேண்டும். இன்று முஸ்லிம் மக்களுக்கு ஒன்று கூறிவைக்க விரும்புகிறோம். அவர்களுக்கு ஒரு ஆபத்து ஏற்படின் தடுப்பதற்கு புலிகள்தான் வேறு எவரும் இல்லை.

இந்த அரசியலைக் கையாளும் ஆற்றல் எமது தேசியத்தலைவரிடம் இருக்கின்றது. எமது விடுதலைப் போராட்டத்தின் விளைவாக, மாவீரர்களின் மாண்பின் பெறுமதியாக சிங்கள தேசத்தில் பாரிய மாற்றம் ஏற்பட்டுள்ளது எமது மக்கள் சிந்தித்துச் செயற் பெறவேண்டிய காலகட்டம் இதுதான் என்றார். (சோ)

### கொடுப்பனவு வழங்கல்

கியூடெக் நிறுவனத்தால் வழங்கப்படும் மாசி உதவு தொகை கொடுப்பனவு வழமையான இடத்தில் வழமையான நேரத்தில் பின்வரும் திகதிகளில் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

புதுக்குடியிருப்பு/ கரைதுறைப் பற்று - [illegible]ற்று, ஒட்டுசுட்டான்/ துணுக்காய் பாண்டியன்குளம்-24 செவ்வாய், கரைச்சி 25 புதன், கரைச்சி/ கண்டாவளை -26 வியாழன், பூநகரி 27 வெள்ளி.

### 5 மாவட்டங்களில் ஈ.பி.டி.பி. போட்டி

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் வேட்பாளர்களை நிறுத்த ஈபிடிபி. தீர்மானித்துள்ளது. இந்த வேட்பாளர்களில் 10 சிங்கள வேட்பாளர்களும் அடங்குவார்கள் என ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். மொத்தம் 80வேட்பாளர்கள் நிறுத்தப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### தமிழரின்...

புறக்கணிப்புச் செய்து இருக்கையில் இருந்து எழுந்து வெளிநடப்புச் செய்துள்ளார்.

இவரின் இந்நடவடிக்கை குறித்து இம்மருத்துவர் சங்கம் விடுத்துள்ள கண்டன அறிக்கையில் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்குப் புறம்பாக அரசியலை நடத்தும் இத்தகைய அரசியல்வாதியை ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (33)

## சுயேட்சையாக போட்டியிடும்

# ஆனந்த சங்கரியின் முடிவிற்கு யாழ். பொது அமைப்புக்கள் ஆட்சேபம்

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ. ஆனந்தசங்கரி சுயேட்சையாக யாழ். மாவட்டத்தில் போட்டியிடவுள்ளமை குறித்து யாழ். மாவட்ட மக்கள் அமைப்புக்கள், வெகுசன அமைப்புக்கள் எனப் பல தரப்பிலிருந்தும் ஆட்சேபங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் ஏகோபித்த குரலினை குழப்பும் விதமாகவும், தமிழ் மக்களின் அபிலாசைகளைப் புரிந்து கொள்ளாதும், அரசியல் சுயலாபம் கருதிச் செயற்படும் இவர் - தமிழ் மக்களின் பிரதிநிதியாக தன்னைக் காட்டிக் கொள்வதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்பதைச் சுட்டிக்காட்டியே இவர்கள் தம் ஆட்சேபத்தைத் தெரிவித்துள்ளனர்.

யாழ். மக்களின் கொள்கைகளுக்குப் புறம்பாகவும், எதிர்பார்ப்புகளுக்கு மாறாகவும் செயற்படும் சங்கரி இன்று தனது வேட்பு மனுவைத் தாக்கல் செய்யவுள்ள நிலையில் இன்று மக்கள் தமது எதிர்ப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபடவுள்ளனர். இதன் விளைவாக இன்று பல்வேறு வடிவங்களிலும் மக்கள் தமது எதிர்ப்பினைக் காண்பிப்பர் எனத் தெரியவந்துள்ளது. (33)

# யாழ், மன்னார், வவு, திருமலை அரையிறுதிக்குத் தெரிவு

மூன்றாவது தமிழீழ தேசிய விளையாட்டுப் போட்டியின் மூன்றாவது நாளான நேற்று நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் மட்டுஅணி1-0 என்ற கோல் கணக்கில் திருமலை அணியை வெற்றி கொண்டது. எம்.எம்.தஸ்லிம் கோல் போட்டார். தொடர்ந்து நடைபெற்ற போட்டியில் யாழ்.அணி முல்லை அணியை 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்ற இன்று மன்னார் அணியுடன் நடைபெறும் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவானது. ஞா.கிறேசியன் இருகோல்களும் ச.தசரதன் ஒரு கோலும் போட்டனர்.

இரவு மின்னொளியில் நடைபெற்ற வவுனியா-கிளிநொச்சி அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளும் தலா ஒரு கோல் போட்டதால் ஆட்டம் சமநிலையில் முடிவுற்றது. வவுனியா அணியின் சார்பில் அரவிந்தனும் கிளிநொச்சி அணியின் சார்பில் செ.வெஸ்லிரமெஸ்காந்தும் கோல் போட்டனர். இரு அணிகளும் தமது பிரிவில் தலா மூன்று புள்ளிகளை லீக் போட்டிகளின் முடிவில் பெற்றிருந்தாலும் கோல்களின் அடிப்படையில் வவுனியா அணி நாளை நடைபெறும் திருமலை அணியுடனான அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவானது.

இப்போடடிக்கு நடுவர்களாக ஜனாப் எம்.டி. பர்சூக்,திருவாளர்கள் ஆர்னோல்ட்,எவ்.சான்டஸ், அந்தோனிப்பிள்ளை, மு.யோகலிங்கன், மு.சிவலிங்கம், சிவனேசன், அமலன், தேவ்ஆனந்த ஆகியோர் கடமையாற்றினர்.

வலைபந்தாட்டப் போட்டியில் யாழ். அணி கிளிநொச்சி அணியை 81-11 என்ற புள்ளி அடிப்படையில் இரகுவாக வென்றது. இப்போட்டிககுத் திருவாளர்கள் வி.விஜயசிறி, செபஸ்ரியான் ஆகியோர் கடமையாற்றினர்.

இரவு மின்னொளியில் நடைபெற்ற இருபோட்டிகளுக்கும் உக்றேன் நாட்டிலிருந்து வருகைதந்த பயிற்சியாளர் அலெக்ஸ் தலைமையிலான குழுவினர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். இப்போட்டிகளுக்கும் முன்னதாக வீர, வீராங்கனைகள் இவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப பெற்றனர்.

# தொண்டமனாறு கடல்நீரேரியில் மீன்பிடிக்கப் படையினர் தடை

(வடமராட்சி)

தொண்டமனாறு கடல் நீரேரிப் பகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட மீனவர்களுக்கு நேற்றிரவு முதல் படைத்தரப்பு தடை விதித்துள்ளது. இதனால் தொண்டமனாறு கடல் நீரேரியில் "வீச்சு வலை" தொழிலில் ஈடுபட்டிருந்த கெருடாவில் அக்கரை மற்றும் தொண்டமனாறு பகுதிகளைச் சேர்ந்த 200க்கும் அதிகமான குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது.

பலாலி அதிஉயர் பாதுகாப்பு வலயத்தின் கிழக்கு எல்லையாக அமைந்துள்ள தொண்டமனாறு கடல் நீரேரியில் மீனவர்கள் படகுகள் ஏதுமின்றி நடந்து சென்றே தொழிலில் ஈடுபட்டு வருகின்ற னர். எனினும் தற்போது "இறால்" சீசன் ஆரம்பித்துள்ளதால் கணிசமான அளவிலான மீனவர்கள் இக் கடல் நீரேரியில் தொழிலில் ஈடுபட்டுள்ளனர்.

இந் நிலையில் நேற்று மாலை கடல் நீரேரிப் பகுதிக்கு தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் அனைவரும் கரையோரப் பகுதியிலமைந்துள்ள இராணுவக் காவலரண்களில் வைத்து படையினரால் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

இக் கடல் நீரேரியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட மீனவர்களை அனுமதிக்க வேண்டாமென தமது தலைமை பணித்துள்ளதாக காவலரண்களிலுள்ள படையினர் தம்மிடம் கூறியதாக தொண்டமனாறு மீனவர் சங்கப்பிரதி நிதிகள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இவ்விடயம் தொடர்பாக போர்நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்திற்கு மீனவர் சங்கப் பிரதிநதிகள் புகார் செய்துள்ளனர். (27)

### தமிழ்க்...

சிதம்பரநாதன், சுரேஸ் பிறேமச்சந்திரன் (ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சுரேஸ் அணி), எஸ். கஜேந்திரன் (தலைவர் சர்வ தேச தமிழீழ மாணவர் பேரவை)

இதனிடையே யாழ். மாவட்டத்தின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான அ. விநாயகமூர்த்தி வவுனியாவில் போட்டியிடவுள்ளதாகவும் தெரியவருகிறது. (27, 33)

### வன்னி..

தேசியக்கூட்டமைப்பு வேட்பாளர்கள் பட்டியல் பூரணப்படுத்தப்படுவது தொடர்பாகவும், தேர்தல் காலச்செயற்பாடுகள் தொடர்பாகவும் மேலும் பல விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டதாக கூட்டமைப்பு பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (10)


75ஆம் ஆண்டு நிறைவு விழாக் காணும்

கிளி/மத்திய கல்லூரியை வாழ்த்துகின்றோம்

பழைய மாணவர்கள்,
(மருத்துவர்கள்,
மாவட்ட வைத்தியசாலை, கிளி.)

(4261)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.